ரூ. 8.00

திருவள்ளுவர் ஆண்டு 2048 மார்கழி - 2049 மாசி
டிசம்பர் 2017 - பிப்ரவரி 2018



உலகத்திருக்குறள் பேரவை
கட்டுரைப் போட்டிப் பரிசளிப்பு விழா
நாள்: 4-2-2018

# மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய
திங்களிதழ்

94

# மக்கள் சிந்தனை

நிறுவனர் : தவத்திரு குன்றக்குடி அடிகளார்

திருவள்ளுவர் ஆண்டு 2049 மாதம் : மார்கழி - மாசி

மலர் : 32 இதழ் : 12 - 2

# அன்பு காட்டி வாழ்வோம்!

காரைக்குடியில் புத்தகக் கண்காட்சி 04.02.2018 இல் தொடங்கி 18-02-2018 இல் நிறைவு பெற்றது. பேராசிரியர் டாக்டர் அய்க்கண் தலைமையிலான புத்தகக் கண்காட்சி அமைப்பினர்களின் அரிய முயற்சியால் புத்தகத் திருவிழா வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது.

ஸ்பெயின் தேசத்து காடலோனியா நகரத்துப் புத்தக விற்பனையாளரும், "டான் க்விக்ஸாட் (Don Quixote)" போன்ற உலகப் புகழ் பெற்ற கதைகளை எழுதியவருமான மிகுள் டி சேர்வன்டெசின் மறைந்த தினமான 1923 ஏப்ரல் 23ஆம் நாளை புத்தகத் தினமாகக் கொண்டாடப்பட்டது.

யுனெஸ்கோ 1995 ஆம் ஆண்டு ஏப்ரல் 23 ஆம் நாளை உலகப் புத்தகத் தினமாக அறிவித்துள்ளது.

நாம் புத்தகத்தைப் புரட்டிப் பார்க்க மறக்கலாம். ஆனால் உலகத்தைப் புரட்டிப் போட்ட புத்தகங்கள் ஏராளம். கால வெள்ளத்தின் ஓட்டத்தில் மனித வாழ்வியலுக்கு எல்லா நிலைகளிலும், எல்லாத் தளங்களிலும் திருக்குறள் வழிகாட்டுகின்றது.

வாழ்க்கைப் போராட்டத்தில்தான் எவ்வளவு துன்பங்கள்! கவலைகள்! சோர்வுகள்! பதற்றங்கள்!

மனக்கவலை மாற்றும் ஒரே மாமருந்து :
"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது"
என்று இறை நம்பிக்கையையும், மனித முயற்சியையும் ஒரு சேர வலியுறுத்துகின்றது திருக்குறள்.

மலை அசையாமல் நின்றது!
அலை ஆவேசமாய் அதன்மீது மோதியது!
மலை சொன்னது : "நான் பலமானவன்"
அலை சொன்னது : "நான் பலவீனமானவன்"

இரண்டாயிரம் வருடங்கள் கழிந்தபின், மலையைக் காணவில்லை. அலையோ இன்றும் அடித்துக் கொண்டே இருக்கிறது.

ஜெயித்தது பலமா? விடாமுயற்சியா?
"தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்"
என்றார் திருவள்ளுவர்.

"புரட்சி" என்ற சொல்லுக்கு நம் மகாசன்னிதானம் தந்த விளக்கம் :

"புரட்சி என்றால் என்ன? என்று மாணவர்களிடம் மகாசன்னிதானம் கேட்டார்கள்.
ஒரு மாணவர் சொன்னார் : "மேலிருக்கும் மண்ணைக் கீழேயும், கீழுள்ள மண்ணை மேலேயும் புரட்டிப் போடுவதைப் போல், மேலிருப்போரை கீழாகவும், கீழிருப்போரை மேலாகவும் புரட்டுவதே புரட்சி" என்றார்.

மகாசந்நிதானம் அவர்கள் : "மேல் மண் கீழ் மண் ஆகலாம். கீழ் மண் மேல் மண் ஆகலாம். அது நிலத்துக்கு நல்லது. ஆனால் மக்களை அப்படிப் புரட்டுவது சமுதாயத்துக்கு நன்மை ஆகாது. கீழ் இருப்பவரை மேலே கொண்டு வரும்

முயற்சி செய்வது நல்லது. ஆனால், மேல் இருப்பவரை கீழே ஏன் தள்ள வேண்டும்? எல்லோரும் மேலே உயர வழி உண்டா? என்று ஆராய வேண்டுமே தவிர, ஒருவரைக் கீழே தள்ளி, ஒருவர் மேலே வருவது நல்ல சமுதாய அமைப்பாகாது. புரட்டுவது மண்ணுக்கு நல்லது. மனிதனுக்கு நல்லதல்ல. எல்லோரும் சமநிலை பெறுவதே உண்மையான புரட்சி" என்று சொன்னார்.

கல்லூரி வளாகத்தில் இருந்த மாமரம் காய்த்துக் குலுங்கும்போது, ஆசை ஆசையாக மாங்காய் கிடைக்கும் என்று ஆவேசமாய் வீசினான் கல்லூரி மாணவன். காவலர் கையில் சிக்கி, கல்லூரித் தலைவர் முன் தண்டனைக்கு நிறுத்தப்பட்டான்.

"ஏன் கல் வீசினாய்?" என்றார் தலைவர்.

"இந்த வயதில் தின்னாமல் எந்த வயதில் தின்ன முடியும்'? மாங்காயைப் பார்த்தால் திருடியாவது தின்னத் தோன்றுகிறது" என்றான் மாணவன்.

கல்லூரித் தலைவர் கண்களில் அன்பொழுக அவனைப் பார்த்து விட்டு, தமது செயலாளரிடம் உத்தரவிட்டார்.

"கல்லூரி வளாகம் முழுவதும் மாங்கன்றுகளை நடுங்கள். மாணவர்கள் ஆசை தீரப் பறித்துத் தின்னட்டும் என்பது தலைவர் உத்தரவு. தண்டனைக்குப் பதில் பெரும்பரிசு தரும் மனம் யாருக்கும் வரும்? வள்ளல் அழகப்பச் செட்டியாருக்கு மட்டும்தான் வரும்.

"கோடி கொடுத்த கொடைஞர்! "குடியிருந்த வீடும் கொடுத்த விழுத் தெய்வம் அழகப்பர்!"

அரண்மனைத் தோட்டத்தில் மாங்காய்க்கு வீசப்பட்ட கல் மன்னர் நெற்றியில்பட்டு நெற்றி புடைத்து விட்டது. கல் வீசிய சிறுவனைப் பிடித்து, "என்ன தண்டனை தரலாம்?" என்று

அமைச்சர்களிடம் மன்னர் கேட்டார். "திருட்டுக் குற்றத்தின் மேல் தண்டனை தரலாம்" என்றார் ஒரு அமைச்சர்.

"கல் கொண்டு அரசர் மீது தாக்க முயற்சி" என்று வழக்கை மாற்றச் சொன்னார் ஒருவர்.

அடிபட்டவர் அரசர் என்பதால், "ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி என்று உள்ளே வையுங்கள்" என்றார் மற்றொருவர்.

துறவி ஒருவர் "மன்னா, உன் நெற்றியில் வீக்கம் எவ்வளவோ அவ்வளவு தங்கம் கொடுங்கள்" என்று சொன்னார்.

"ஏன் தங்கம் கொடுக்க வேண்டும்?" என்று அதிர்ச்சியோடு வினவினார் அரசர்.

"மன்னா! கல் சரியாகப் மாமரத்தில் மாங்காயின் மீது பட்டிருந்தால் மாமரம் தேன் போன்ற பழம் தந்து மகிழ்ந்திருக்கும். மாமரமே தன்னை அடித்தவனுக்கு மாங்கனியைப் பரிசளித்து பாராட்டும் பொழுது, அரசன் அதைவிட அதிகமாக பரிசளித்தலே பெருமை" என்றார் துறவி.

"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்"

தான் காயங்களைப் பெற்றாலும் பிறருக்கு மருந்தாகும் மரம்போல், செல்வம் உடையவரின் செல்வம் பிறருக்குப் பயன்பட வேண்டும் என்றார் திருவள்ளுவர்.

இளம் வரைகலை வல்லுநர் ஒருவர் நதியின் மீது பாலம் கட்டுவதற்கான பாலத்தின் வரைபடத்தைத் தயாரித்தார். பாலத்தின் மேல் ஒரு சிறுவன் பட்டம் விடுவதைப் போல் சேர்த்து வரைந்திருந்தார். பாலத்தின் வரைபடத்தைப் பார்த்த தலைமைப் பொறியாளர் பதறிப் போனார். தலைமைப் பொறியாளர் வரைபட வல்லுநரைத் திட்டினார். "இது ஓவியப் படமா? பாலத்தின் வரைபடம். பாலத்தில் பையன் ஒருவன் பட்டம் விடுகிற மாதிரி இருக்கக் கூடாது" என்றார்.

புதிதாக வேறொரு வரைபடத்தை வரைந்து எடுத்துப் போனார் வரைபட வல்லுநர். பாலம் சரியாக வரையப்பட்டிருந்தது. இப்போது பாலத்தின் கீழ் நதியில் சிறுவன் பட்டம் விட்டுக் கொண்டிருந்தவாறு வரைபடம் இருந்தது. இப்பொழுதும் தலைமைப் பொறியாளர் அதிர்ச்சியோடு கத்தினார். "காற்றாடிப் பையன் செத்து விட்டான். அவன் இல்லை என்று நினைத்து கொண்டு வரைந்து கொண்டு வா" என்றார் தலைமைப் பொறியாளர்.

இப்பொழுது பாலத்தின் வரைபடம் சரியாக அமைந்திருந்தது. அப்படியிருந்தும் நதியின் கரை ஓரத்தில் ஒரு சிறிய மணல் மேடு இருந்தது.

"என்னய்யா! மணல்மேடு?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார்.

"சமாதி சார். அது செத்துப்போன காற்றாடிப் பையனின் சமாதிதான் சார் அந்த மணல்மேடு" என்றார் வரைபட வல்லுநர்.

எவ்வளவு முயன்றும் பையனைப் பாலத்தின் படத்தில் இருந்து எடுக்க முடிந்தாலும் படம் வரைபவர் மனத்தில் இருந்து எடுக்கவே முடியவில்லை.

இப்படித்தான் நம் மனதுக்குள் குடியிருக்கும் தீய எண்ணங்கள் நம்மை விட்டகல முடியாமல் நம்மை ஆளுமைச் செய்கின்றன. நாம் நம் தீய எண்ணங்களை நம் மனதில் இருந்து அப்புறப்படுத்த முடியாமல் தவிக்கிறோம்.

நற்சிந்தனை, நல்லெண்ணம் நம் இதயத்தில் இருந்தால் மனம் அன்புக் கோயிலாகும். ஆசை, கோபம், பொறாமை முதலிய அழுக்குகள் குடியிருந்தால் மனம் மாசுபடும்: அல்லலுறும். நம் எண்ணமே நம் வாழ்வு.

எல்லாத் தீய எண்ணங்களையும் மாற்றுகின்ற ஒரே வழி அன்பு காட்டுவது தான். அன்பு வழி. அதுதான் நம் உயிர்நிலை என்ற நிலையில், அன்பு காட்டி வாழ்வோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

குன்றக்குடி அடிகளார்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

# திருவாசகத் தேன்

## (தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

## அக்காரம் தீற்றிய அதிசயம்

வாழ்வு சிறக்க சுய விமர்சனம் தேவை. விமர்சனம் என்பதைத் தூய்மை செய்தல் என்று கொள்ளலாம். ஒரு நாளில் எத்தனை தடவை கண்ணாடி முன் நின்று முகம் பார்த்துத் துடைத்துத் திருத்தம் செய்து கொள்கின்றோம்! அழகு செய்து கொள்கின்றோம்! அதுபோல நம் ஆன்மாவை – நாம் இயற்றிய செயல்களின் பயன்பாடு முதலியனவற்றை ஆய்வு செய்துகொண்டு பயனற்றவைகளைத் தவிர்த்துக் கொண்டு பயன்பாடுடைய பணிகளைச் செய்வது சுய விமர்சனம், எங்கே சுய விமர்சனம் புறக்கணிக்கப்படுகிறதோ அல்லது தரமாக அமையவில்லையோ அங்கே பிறர் விமர்சனம் வரும். ஆனால், விமர்சனம் விமர்சனம்தான்! விமர்சனம் ஆக்கத்தின்பாற்பட்டதே! குற்றங் கண்டுரைத்தால் ஆக்கம் இல்லை ; இருக்காது. விமர்சனம், எரியும் விளக்கில் சுடர் தட்டி விட்டு, எரிய விடுதல் போன்றது! அல்லது சுய விமர்சனம் பரிபூரண ஆக்கம்!

மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தில் பெரும்பான்மையானவை சுயவிமர்சனப் பாடல்கள். தன்னைத் தானே ஆய்ந்து தமது குற்றங்களை உணர்ந்து திருத்தம் காணும் வேட்கையில் பாடுகின்றார்! அழுது அழுது பாடுகின்றார்! அதனாலேயே திருவாசகத்தை ஓதினால் உருக்கம் ஏற்படுகிறது. "நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து" என்றும்,

*யானே பொய், என் நெஞ்சும்*
*பொய்; என் அன்பும் பொய்*
*ஆனால் வினையேன் அழுதால்*
*உன்னைப் பெறலாமே*
*தேனே அமுதே கரும்பின்*
*தெளிவே தித்திக்கும்*
*மானே அருளாய் அடியேன்*
*உன்னை வந்துறு மாறே!* (திருச்சதகம்-90)

என்றும் பாடுகின்றார்.

*அறிவ னே! அமு தே! அடி நாயினேன்*
*அறிவ னாகக் கொண் டோ, எனை ஆண்டது*
*அறிவி லாமையன் றேகண்டது ஆண்ட நாள்*
*அறிவ னோ அல்ல னோ அரு ளீசனே!* (திருச்சதகம்-50)

என்றும் அருளிச் செய்துள்ளார்.

மாணிக்கவாசகர் அறிவால் சிவமே என்று போற்றப்பெறும் அளவுக்கு உயர்ந்ததற்குக் காரணம் தம்மை உணர்ந்து தமது பழக்கங்களைத் தவிர்த்துப் பழகி சிவன் கழலே சார்பென்று உணர்ந்து சிவத்தினைச் சார்ந்து ஒழுகியதேயாம். மாணிக்கவாசகரிடம் "நான்" கெட்டுப் போய்விட்டது; சிவமாம் தன்மை மேலிட்டது. ஆதலால், உலகியல் முன்னேற்றமானாலும் சரி, ஆன்மிக முன்னேற்றமானாலும் சரி சுய விமர்சனம் தேவை. சுய விமர்சனம் செய்து கொள்ளவில்லையெனில் வளர்ச்சியில்லை; பிறர் விமர்சனத்தைத் தாங்கி மாற்றிக் கொள்பவர்கள் உயர்வார்கள்!

மாயம்! உண்மையைப் போல் தோற்றுவது மாயம்! இந்த மாயம் நச்சுத் தன்மையுடையது! இது கடித்தவுடன் மனிதன் "நான்" ஆகின்றான். "நான்" என்பது அகந்தையின் பரிணாமம். பற்றற்ற துறவி ஒருவர் பலகாலும் உண்ணாது, உறங்காது யாதொரு தீங்கும் செய்யாது நோன்பிருந்தார். அவர் இறந்து போன பிறகு சொர்க்கத்தில் இடம் கிடைக்கவில்லை! மீண்டும் பிறக்க ஆணையிட்டான் இறைவன். துறவி "ஏன்?" "எதற்காக?" என்று இறைவனிடம் கேட்க "நான்" என்பது இழக்கப் பெறவில்லை என்றான் இறைவன். கொங்கண முனிவர் கதை நாடறிந்த ஒன்றுதானே! "நான்" என்பது செருக்கினைத தரும். செருக்கு, அன்பிற்குப் பகை; அருளுக்குப் பகை; மனித உறவுகளுக்குப் பகை; ஏன் அறிவுக்கும் ஞானத்திற்கும் கூடப் பகை. இந்த "நான்-ஐ" ஒழித்தல் தவத்தில் சிறந்த தவம்.

*"நான் கெட்ட வாபாடித் தெள்ளேணம் கொட்டமோ?"*

*"................................ நாம் ஒழிந்து*

*சிவமான வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ?"*

என்றும் மாணிக்கவாசகர் பேசுவார். இந்த "நான்" கெடுதலைக்

குமரகுருபரர் "பின்னும் ஓர் மாத்திரை குறுகினன்" என்பார். அதாவது சீவன் சிவனாயிற்று. "நான்" பரந்த வெளியில் ஒற்றை மரம்! "நாம்" அடர்ந்த தோப்புக்குள் ஒரு மரம்! பரந்த வெளியில் உள்ள ஒற்றை மரத்திற்குச் சூறைக் காற்றடிக்கும் போது பாதுகாப்பில்லை. தோப்புக்குள் உள்ள மரத்துக்குப் பாதுகாப்பு உண்டு. "நான்" மனித குலத்தின் தீமைகளுக்கெல்லாம் மூலகாரணம். இதுதான் அப்பரடிகள் கூறிய மூலநோய் போலும்! "நான்" உடன் பிறந்தது.

"எனது" என்பது தீமை, "என்னுடையது" என்ற தீமையே அழுக்காற்றின் தாய்! வீட்டுக்கும் வீட்டுக்கும் இடையேயுள்ள சுவர்களும் வேலிகளும் தோன்றியது. "எனது" என்பதிலிருந்து தான்! வளம் - வறுமை, களவு - காவல் பிறந்து வளர்ந்ததும் "எனது" என்ற செருக்கினால் தான். பகைமைக்கும் கூடக் காரணம் "எனது" தான். இந்த "எனது" நீக்குதல் "நான்" அகற்றுதலைவிடக் கடினம். எனது சொத்து என்பது பற்றிப் பிடித்துக்கொண்டு வளர்கிறது. "எனது"க்குத் தலைசிறந்த பரிவாரம் அரசு. "என"தின் ஏவல் கேட்போர் ஆட்சியாளர்; காவல்துறையினர்; பதிவாளர் துறையினர். எனது என்ற தீமை ஆட்சிக் கட்டிலிலியே ஏறிவிட்டது. "நான்" "எனது" என்பதை செருக்கு என்றது வள்ளுவம். "நான்" "எனது" என்ற மாயம் மனிதனைக் கெடுத்துவிடுகிறது. ஏன்? மனிதனாக வாழ அவை அனுமதிப்பதில்லை.

"நான் என்னும் செருக்குடையவன் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முயற்சி செய்வான்; தான் செய்யாததைச் செய்ததாகக் கூறுவான்; பெருமையைத் தேடுவான். உரிய விலையின்றிச் செல்வத்தைத் தேடுவான். காரண காரியமின்றி "நான்" மட்டுமே கருவியாகக் கொண்டு மிரட்டி, பயமுறுத்திப் பணம் கேட்பான். "நான் ஆணையிட்டால்!" என்பான். இந்த "நான்" காரணமாகப் பொய் கூறுவான். "எனது" என்பது பொய் என்ற உரத்திலேயே வளரும். பொய்யும் வளரும் தன்மையது. விளையாட்டாக அல்லது அவசியத் தேவையாக ஒரு பொய் வாழ்க்கையில் தோன்றிவிட்டால் பொய் நாளும் வளரும். "எனது"உரிமைச் செல்வம் அடுக்கிய பலவாக ஆகவேண்டுமானால் பொய் தேவைப்படும். ஒரு சில நல்லவர்கள் பொய்யைப் பாதுகாப்புக்கு மட்டும் பயன்படுத்துகின்றனர். சிறுமதியினர் பொய்யையே கருவியாகப் பயன்படுத்துவர். அடுத்தவர் செல்வத்தைப் பறிப்பர்."எனது" உடன்பிறப்புக்களைக் கூடப் பிரிக்கும். கைகேயியின் மனத்தைத் திரித்தது கூட "எனது" தானே! மழலைக்

குழந்தையாக இருக்கும் பொழுது "நான்" இல்லை; "எனது" இல்லை; "எனது" என்ற உணர்வு வந்தவுடன் பொய்யும் உடன் வந்து விடுகிறது. விளையாட்டுப் பொம்மையில் தொடங்கும் "எனது", சொத்து வரையில் வளர்கிறது. பகையை மூட்டுகிறது. கலகத்தை வளர்க்கிறது; மனிதரைப் பிரிக்கிறது. நட்பு, காதல் உறவு எல்லாம் "நான்" "எனது"க்கு முன் நிற்க முடியாமல் தோற்றுப்போயின. "எனது" அற்றால் "நான்" அறும். "நான்" "எனது" அற்றால் பொய் அகலும்; "பொய்யினைப் பல செய்து" என்கிறார் மாணிக்கவாசகர். "பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்" என்பார் பிறிதொரு பாடலில். உண்மையல்லாதன வெல்லாம் பொய்! உரியதல்லாதது - செல்வமாயினும், புகழாயினும் அது பொய்தான்! இன்றைய சமுதாயம் இவர் அவர் என்றில்லாமல் அவரவர் தகுதிக்கு ஏற்றாற்போலப் பொய்யிலே பிறந்து, பொய்யிலே வளர்ந்து, பொய்யிலே புரள்கிறது. பொய் கலந்த மெய்கூட இல்லை. உண்மையைச் சொன்னால் இந்தச் சமுதாயத்தில் - ஆட்சியமைப்பில் வாழ இயலாத நிலை இன்று! இன்று உண்மையைச் சொல்லி வாழ விரும்புபவர்கள் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டியதுதான்!

பொய், "நான்" என்னும் செருக்கு, "எனது" என்னும் செருக்கு ஆகியவை மனிதனை ஆட்கொண்ட பிறகு அவன் வாழ ஆசைப்படுகிறான்! "நான்", "எனது", "பொய்"ஆகியன வாழ்வதற்குரிய இயல்புகள் அல்ல! ஆயினும் வாழும் ஆசை யாரை விட்டது? ஆதலால், நடிப்பர்! நடிப்பு பலவகை! வாழும் களங்கள் தோறும் நடிப்பு மாறும்! வீட்டில் நடிக்கும் நடிப்பு வேறு! நாட்டில் நடிக்கும் நடிப்பு வேறு! சமூக நடிப்பு வேறு! நாட்டிற்குரிய நடிப்பு வேறு! வேலையிலும் நடிப்பு உண்டு! சமூக சேவையில் தொண்டும் உண்டு; நடிப்பும் உண்டு! நடிப்பை எளிதில் கண்டுணர முடியாது. நம்பிக்கைகளை வளர்த்து அதன் பிறகுதான் நடிப்பு தோன்றும்! கடின உழைப்பாளி போல நடிப்பர். ஆனால் அவர் செய்யும் வேலைகள் ஊர்ந்து செல்லுமே தவிர, நகர்ந்துகூடச் செல்லா. அன்பிலும் விசுவாசத்திலும் முதிர்ந்தவர் போலக் கண்ணீர் சிந்துவார். ஆயினும் அன்பு என்பது மருந்துக்குக்கூட கிடைக்காது. நடிகர்கள் நாடகம் முடிந்தவுடன் நாடக மேடையைவிட்டு இறங்கிவிடுவது போல, நடிக்கும் நண்பர்கள் அவரவர் காரியம் முடிந்தவுடன் அகன்றுவிடுவர்; அந்நியராகி விடுவர். பின் அழைத்துத்தான் ஆகவேண்டும்! வாங்கினதை மறந்தே விடுவர். மனித குலத்தில் மட்டும் நட்பும் உறவும் சீராக அமைந்துவிட்டால்

வறுமை ஏது? ஏழ்மை ஏது? பகை ஏது? கலகம் ஏது? எல்லா நடிப்பிலும் "தலைமை" நடிப்பு அலாதியானது; சுவை மிக்கது. இன்று தலைவராக ஆசைகொண்டு திரிவோருக்குத் தகுதியே இல்லை! ஆனால், எல்லோருக்கும் தலைவராக வேண்டும் என்று ஆசை.

வேள்வியில் இடம்பெறும் அவியுணவு சிவனுக்கே உரியது. அவனே சாகாதவன்! மூவாதவன்! பிறவா யாக்கைப் பெரியோன்! ஆனால், மற்றைத் தேவர்களுக்குத் தாங்களும் தலைவர்களாக ஆசை! தக்கன் வேள்வியில் தலைவர்கள் ஆனார்கள்! அவிவுணவை உண்டார்கள்! பின் பாற்கடல் கடைந்தபொழுது முதலில் ஆலகால நஞ்சு எழுந்தது! தேவர்கள் அலறி ஓடினார்கள்! எம்பெருமான் நஞ்சை உண்டு அமரர்களைக் காப்பாற்றினான்! தேவர்களுக்கு அமுதைக் கொடுத்தான்!

*"விண்ணோர் அமுதுண்டும் சாவ ஒருவரும்*
*உண்ணாத நஞ்சுண்டு இருந்தருள் செய்வான்!"*

என்பார் இளங்கோவடிகள். தலைமை என்றால் மற்றவர்களைத் துன்பத்திலிருந்து காப்பாற்ற வேண்டும். மற்றவர்களைத் துன்பத்திலிருந்து காப்பாற்றாதவர்கள் – காப்பாற்ற முடியாதவர்கள் எங்ஙனம் தலைவராக முடியும்? ஆனால் இன்று தலைவருக்குரிய இலக்கணங்கள் மாறி வருகின்றன. துண்டுகள், (பொருளற்ற – பயனற்ற) பேச்சுத் திறன் இருந்தால் தலைவராகி விடலாம். இந்த இலக்கணங்களைத் "தலைமை"த் தகுதியாக எண்ணி நடித்தல்! "மண்ணிடை நடித்து" என்பார் மாணிக்கவாசகர். மண்ணிடை நடித்தல் ஏன்? சில நாள்களாவது உண்மை வாழ்வு வாழக் கூடாதா? இதற்கெல்லாம் காரணம் கேட்டால் "முன் வினையின்" மீது பழிபோட்டுத் திரிவது இயற்கையாகி விட்டது. உலா வருதல், பயணம் செல்லுதல் என்பன வேறு. இவற்றிற்கு நோக்கம் உண்டு. "திரிதல்" – பயனற்றது; உழைப்பில்லாமல் யாதொரு பயனுமின்றி ஊரைச் சுற்றுவர்; பிழைப்புக்கு இலவசத் தேநீர் – சோறு எதிர்பார்ப்பர்; காரணம் கேட்டால் "வினைப்பயன்" என்பர். "கெட்ட காலம்" என்பர். "நல்லகாலம் பிறக்கவில்லை" என்பர். "ஆறுமாத காலம் கழிய வேண்டும்" என்பர். முன் வினையின்மீது பழிபோட்டுவிட்டுச் செயலற்றிருப்பவர்களின் – தூர்த்தர்களாக நடப்பவர்களின் நடிப்பு பயன் தராது. நீண்ட நாள்களுக்குச் செலாவணியாகாது.

*"நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து*
*நான் நடுவே*
*வீடகத்தே புகுந்திடுவான் மிகப் பெரிதும்*
*விரைகின்றேன்"*

என்றும் திருவாசகம் பேசுகிறது. நடிப்பும் விரைவும் இணைந்தவை போலும்! "உள்ளது போகாது" என்று அமைதியாக நடக்கும்; செய்யும் மண்ணிடையில்தான் நடிக்க இயலும். ஏனெனில் ஏமாறுபவர்கள் மண்ணில்தான் அதிகம். பொருள் செய்தல், அரசியல், மதம், மந்திர தந்திரங்கள் முதலிய அனைத்துத் துறைகளிலும் இன்று நடிப்பு புகுந்து விளையாடுகிறது. இன்று நமது நாட்டில் சோஷலிசம் என்பதே நடிப்பாளர்களின் மந்திர மொழிபோல் விளங்குகிறது. நடிப்பு, போலியானது; பொய்ம்மையானது. நிர்வாணமான சுயநலத் தன்மையுடையது. நடிப்பின் விளைவு துன்பம்; துயரம்; எதிர் விளைவு சமுதாயச் சீரழிவு. குற்றங்கள், குறைகள் உடையதாக இருப்பது பாபமல்ல. இவற்றை நடித்து மறைப்பதுதான் குற்றம். நியாயப்படுத்துவதுதான் குற்றம். தவறுகள் செய்துவிடுவது பாபம் அல்ல. ஆனால் தவறுகளே செய்யவில்லை என்று நடிப்பது – உண்மைக்குப் புறம்பாக பேசுவது – நடப்பது இவைதான் பெருந் தீங்கு செய்யும். ஆதலால், மண்மீது பொய்யினை மறைத்துக் கொள்ளும் நடிப்பு வேண்டாம். ஆனால், மாணிக்கவாசகர் "நடிக்கவும் வேண்டும்" என்கிறார். பொய்யை மறைக்கும் நடிப்பு அல்ல. உண்மையை அடைய ஆர்வம் கொள்ளும் பத்திமை நடிப்புத் தேவை. "நடிக்கின்றிலை" என்பார்.

இங்ஙனம் மண்ணிடை நடித்தும், வினை விளைவின் பயன் என்றும் திரிகின்ற ஆன்மாவை என்ன செய்வது? ஒரு ஆன்மா பைத்தியம்போலத் திரிந்தால் தாயிற் சிறந்த தயாவுடைய சிவத்துக்கு இழுக்கல்லவா? சிவத்தின் படைப்பில் ஆன்மாக்கள் இப்படித் திரிந்தால் உலகம் பழி தூற்றாதா? சந்தி சிரிக்க வைக்காதா? ஆதலால், சிவம் திரியும் ஆன்மாவைப் பிடிக்கிறான், பிடித்து நிறுத்துகிறான். திரியும் ஆன்மாவைத் தடுத்து நிறுத்துகிறான். தன்னுடன் பிணைத்துக் கொள்கிறான். சிவத்துக்கு "நடுதறி" என்று ஒரு பெயர் உண்டு. அப்பரடிகள் திருத்தாண்டகத்தில் "கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே" என்றார். ஆன்மாவைச் சிவத்துடன் இணைத்துப் பிரியாமல் கட்டிப்போடுவது கட்டுத் தறி! பாரதம், சகாதேவன் கண்ணனைக் காட்டினான் என்று கூறுவதை ஓர்க.

நிலை தடுமாறித் திரியும் ஆன்மாவை, நம் தலைவன் சிவம் தாமே எளிமையாகப் புகுந்து நிறுத்தி ஆட்கொள்கிறான். நாளும் சின்னஞ்சிறு செயல்கள் செய்தும் வினைகள் பல செய்தும் திரியும் ஆன்மாவை, நான்மறை நாயகன் நயந்து வந்து ஆட்கொண்டருள்கிறான். நான்முகனும் திருமாலும் தேடியும் காணப்பெறாத சிவம், நான்மறைகள் ஐயனே என்று தேடியும் காணப்பெறாத விழுப்பொருள் வலியவந்து ஆட்கொண்டருளிய போதும் அருமை உணர்ந்தபாடில்லை. திருவருள் நாட்டம் வரவில்லை; ஆணவத்தின் சேட்டை இம்மியும் குறையவில்லை; வேப்ப இலை தின்னும் புழுவைக் கரும்பில் இட்ட கதையாகவே அமைகிறது. ஆயினும் தென்னன் பெருந்துறையுறை சிவன் வள்ளல், ஆன்மாவை விடமாட்டான்! சில பொருள்கள் ஒரு கொதியிலேயே பக்குவமாகிவிடும்; பதப்படும். சில பொருள்களுக்குப் பல கொதி தேவைப்படும். நல்லான்மாக்கள் ஒரு சொல்லில் பெருமானுக்கு ஆட்படும்! முத்தி நெறியில் நிற்கும்! புறத்தே போகா! பெருமானே பார்த்துத் துடைத்தெறிய முற்பட்டாலும் போகா! இறுக்கி வளாறினால் அடித்தாலும் போகாது! பக்குவம் குறைந்த ஆன்மாக்களைப் பலதடவை அடித்து அடித்துத்தான் அற்புதம் செய்கிறான் சிவம்! ஆனாலும் ஓர் ஆன்மா வினையினின்று விடுதலை பெற்றுத் திருவருளின்பத்தில் திளைக்கச் செய்யும் வரையில் சிவம் ஓயாது. அவன்தன் ஐந்தொழிலும் நிற்காது! வேண்டியது நமது விழிப்புணர்வே!

நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பல செய்து
　　நானென தெனு மாயக்
கடித்த வாயிலே நின்று முன் வினைமிகக்
　　கழறியே திரிவேனைப்
பிடித்து முன்னின்ற பெருமறை தேடிய
　　அருட் பொருள் அடியேனை
அடித்த டித்துவக் காரமுன் தீற்றிய
　　அற்புதம் அறியேனே! (அற்புதப் பத்து–3)

---

(தொடரும்)

> எழுந்து நில். தைரியமாக இரு. வலிமையுடன் இரு. பொறுப்பு முழுவதையும் உன் தோள் மீதே சுமந்திடு. உன்னுடைய விதியைப் படைத்திருப்பவன் நீயே. உனக்குத் தேவையுள்ள எல்லா வலிமையும் உதவியும் உனக்குள்ளே குடி கொண்டுள்ளன.
>
> – சுவாமி விவேகானந்தர்

# சிலம்பில் தொல்காப்பியப் பதிவு – VII

(தமிழாகரர். தெ. முருகசாமி)

எந்த ஒருமொழிக்கும் எழுத்தும் எழுத்தாலான சொல்லுமே கருத்தை உணர்த்துதற்கான அடிப்படை ஆகும். இந்த எழுத்தும் சொல்லும் பொருட் புலப்பாட்டின் கோட்பாட்டில் அமைந்ததுதான் அவற்றிற்கான இலக்கணம். இதைத்தான் எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின் பதமாம் – என்கிறது நன்னூல் இலக்கண நூல்.

அந்த வகையில் மொழித் தோற்றத்திற்கான உதவியில் தனி எழுத்துக்களின் பங்களிப்பு முதன்மையானது.

எழுத்துக்கள் உயிர், மெய், உயிர்மெய் எனப் பிரிக்கப்பட்டாலும் அவை குறில், நெடில் என்ற இருவேறு அச்சில் கிளைக்கின்றன. அங்ஙனம் கிளைக்குங்கால் மெய் எழுத்துக்கள் தனித்தியங்காதவை என்பதால் உயிருடன் சேர்ந்து உயிர்மெய் ஆகும்.

இங்ஙனமாக அமைந்த உயிர் எழுத்து, உயிர் மெய் எழுத்துக்கள் குறில், நெடிலாய்க் கருத்தைப் புலப்படுத்தும்போது தனித்த குறிலெழுத்தைவிடத் தனித்த நெடில் எழுத்தே ஓரெழுத்து ஒருமொழியாய்ப் பொருள் தரும்.

இந்த வகையிலும் பல்கிப் பெருகியுள்ள உயிர்மெய்யின் தனி நெடில்களைவிட உயிர் எழுத்தின் வர்க்கத்தில் ஆ,ஈ,ஊ,ஏ,ஐ,ஓ,ஔ என்ற ஏழும் ஓரெழுத்து ஒருமொழியாய்ப் பொருள் தரும்.

இவற்றுள் ஐ, ஔ என்ற எழுத்துக்கள் கூட்டொலி எழுத்துக்கள், அய், அவ் என ஈரெழுத்துக்கள் சேர்ந்து கூட்டாக ஒலிப்பனவாய் உள்ளதால் இவை சந்தியக்கரம் என வடமொழியிலும் கூறப்படும். ஈருயிர்ச் சந்தி என (DIPHTHONG) ஆங்கிலத்திலும் பெயர் பெறும்.

இந்தக் கூட்டொலி எழுத்துக்களான ஐ,ஔ பற்றி மொழி இலக்கணப் பாங்கிலும் மொழியியல் (LINGUISTIC) பாங்கிலும் கருத்துக்கள் பல்வேறாக உள்ளதால் அவை சிலப்பதிகாரக் கதை மாந்தர்களில் கண்ணகி, மாதவி எனும் இருவரோடு பொருந்துமாறுள்ளதை உணர்த்துவதே இக்கட்டுரைக்கான கருதுகோள்.

ஐ – என்பது தலைமை, அழகு, சளி எனப் பல்பொருள் தரும்.

ஔ – என்பது பூமி, பாம்பு, வியப்பு எனச் சில்பொருள் தரும்.

இந்த ஈரெழுத்துக்கள் தொல்காப்பியத்தின்படி இருவேறு நிலையில் உச்சரிக்கும்படியாய் உள்ளன.

I. அகர இகரம் ஐகார மாகும்.

அகர உகரம் ஔகார மாகும்.

II. அகரத் திம்பர் – யகரப் புள்ளியும்

ஐ என் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்.

(தொல் – எழுத்து – மொழிமரபு)

இந்த நூற்பா மட்டுமே உள்ளதால், ஔ எழுத்துக்குமாகக் கூறிய நூற்பாவையும் உணர்தல் வேண்டும் என உரையாசிரியர்கள் கூறுவர். அதனால்தான் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத் தொல்காப்பிய மூல நூலின் பதிப்பில் இளவழகனார்,

அகரத் திம்பர் வகரப் புள்ளியும்

ஔஎன் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும் எனும் ஒரு நூற்பாவை விடுபட்டதைச் சேர்த்ததைப் போல் இணைத்துள்ளார்.

எனவே பிற எந்த உயிரெழுத்தின் நெடிலுக்கும் இல்லாத ஒலிப்பு முறையும் எழுத்துமுறையும் இந்த ஐ,ஔ – எழுத்துக்களே உள்ளன எனத் தெரிகிறது.

மேற்கூறிய இருவேறு வகையான ஐ, ஔ உச்சரிப்பை வரி வடிவில் எழுதிக் காட்டுங்கால் மொழியிடை உணரலாமேயன்றித் தனித்து உணரமுடியாது என்பதையும் அறிதல் வேண்டும்.

அதாவது அ,இ–ஐ ஆகும் என்றால் ஐ – எழுத்துக்குள்ள, ஓரெழுத்து ஒரு மொழிக்குள்ள பொர்ருளை அஇ தராது, ஐ – தலைமை எனப் பொருள் தருதல்போல் அஇ – தலைமை என்ற பொருள் தராது. ஒலி மட்டுமே ஒப்புமை.

உச்சரிப்பின் அடிப்படையில் மொழியிடையில் உணரலாம். எடுத்துக் காட்டாக வைரம் என்பதை வ இரம் என்றும் ஔவுக்குப் பதிலான அஉ என்பதை, கௌந்தி என்பதற்குப் பதிலாக கஉந்தி என உச்சரிப்பதன் மூலமும் ஒரோ வழி எடுத்துக்காட்டுவதன் மூலமும் உணரலாம். இவ்வரிவடிவ நிலை அரிதான ஒன்று.

இவ்வாறே அய், அவ் என்பன ஐ, ஔ, எனும் ஓரெழுத்து ஒருமொழி தரும் பொருளைத் தராமல் ஒலியளவில் ஐயர் – அய்யர் என்றும், ஔவை – அவ்வை என்றும் ஆகலாம். அதாவது அய் என்றால் தலைமை என்ற கருத்து இல்லை. ஒலி மட்டுமே ஒப்புமை.

ஆக அஇ, அஉ, அய், அவ் எனபன ஐ,ஔ என்பனவற்றின் மாற்றொலியாய் மொழியிடை உணரத்தக்கதாய் உணரப் படுவதாக உள்ளனவேயன்றித் தனி எழுத்து வடிவில் பொருளைத் தாரா எனலாம்.

இப்படிப் பல்வேறுபட்ட உணர்வுடன் கூடிய ஐ ஔ போலக் கண்ணகி மாதவியரின் பாத்திரப் படைப்பு அமைந்துள்ளது.

கண்ணகியும் மாதவியும் ஓரெழுத்து ஒருமொழிகளான ஐ,ஔ போலத் தனித்த கதை பொதி மாந்தர்கள்.

முறையே தனித்த மனைக்கோல, புனைக்கோல மாண்புடையவர்கள்.

கண்ணகியின் தனித்த இல்லற மாண்பைப் போல மாதவியும் தனித்த கலை மாண்புடையவள்.

இருவர்க்கும் தனித்த கோவலனே கணவனும் காதலனுமாகத் திகழ்கிறான்.

கதைப் போக்கின்படி இருவரும் வினைப்பயனால் கோவலனுடன் கூடுகின்றனர்.

இங்ஙனம் கூறிவந்த பாங்கில் கண்ணகிக்கும் மாதவிக்கும் கோவலனுக்குமுன், கோவலனுக்குப் பின் என்ற பிரிவில் கதையைப் பொருத்தி உணருங்கால் ஐ, ஔ என்ற தனித்த ஓரெழுத்து ஒருமொழிப் பாங்கிற்கும் அவைகளே அஇ, அஉ என்றும் அய், அவ் என்றும் மொழியிடை அமையும் பாங்கிற்குமான வேறுபாட்டில் காணும் பொருத்தத்தை உணரும்போது இலக்கண வழி இளங்கோவடிகளின் கதை உணர்த்தும் உத்தியை உணர்ந்து துய்க்க முடிகிறது.

இளங்கோவடிகள் தொல்காப்பியரின் நூற்பாவைக் கையாண்டு இத்தகு பொருத்தத்தைத் தெளிவுபடுத்தவில்லையாயினும் கூறப்பட்டதிலிருந்து கூறப்படாததை அனுமானமாகப் பொருத்துதலை ஓர் உத்தியாகத் தொல்காப்பியர் கூறிய வழி உணர்ந்து தெளியலாம் என்க!

ஐ, ஔ – உயிர் வருக்கத்தின் நெட்டெழுத்துக்கள் போலக் கண்ணகியும் மாதவியும் சிலப்பதிகாரக் கதையளவில் உயிர்ப்புடைய உயர்

பாத்திரங்கள். கட்டப்பட்ட ஆண் பாத்திரமான கோவலனுக்குள்ள குறைபோல் இல்லாத பெண்ணியப் பெற்றியுடைய வெற்றிப் பாத்திரங்களே கண்ணகி – மாதவி.

மாநாய்கன் குலக்கொம்பெனும் ஆரணங்காய் அறிமுகமாகும் கண்ணகி, கோவலனை மணந்து மனையறம் படுங்கால் சீரணங்காய்க் காணப்பட்டாள்.

அவ்வாறே மாதவியும் பிறப்பிற் குன்றாப் பெருந்தோள் மகளாக அறிமுகமாகிக் கோவலனைக் கரம்பற்றியதால் ஒருவனுக்கு ஒருத்தியான உன்னதத்தை உயர்த்திப் பிடித்த பத்தினியாம் மணிமேகலைக்குத் தாயாய்க் காணப்பட்டாள்.

ஆரணங்கும் சீரணங்குமாயிருந்த கண்ணகி பாண்டியன் அவையில் பேரணங்காய்க் காட்சிதந்து சேரநாட்டில் உலகிற்கு ஓரணங்காய்த் தெய்வமானாள்.

மாதவியும் கோவலனுக்குப் பின், கலையும், களையும் இழந்தவளாய் – தன்குல ஒழுக்கத்தின் எதிர்நீச்சல் போட்டவளாய் மகளைப் பௌத்தத்திற்கு அர்ப்பணித்தவளாய் அடையாளமானாள்.

இக்கதைக் கூறுகளைத் தனித்த ஐ, ஔ என்பனவற்றோடும் அவ்வெழுத்துக்கள் மொழிப்படுத்தும் நிலையில் பெறும் மாற்றங்களோடும் பொருந்த உணரின் சிலம்பின் செந்தமிழ்ச் சிங்கார ஒலி, தனித்துக் கேட்குமாறுள்ளதை அறிந்து இன்புறலாம்.

ஐ, ஔ என்பன தனித்து ஓரெழுத்து ஒருமொழியாக இருக்கும்போதும் மொழியாகும் போதும் அவற்றின் ஒலிவடிவும் வரி வடிவும் மாறாமல் இருக்கும் எடுத்துக்காட்டு.

ஐ, ஐயர் – ஔ, ஔவையார்.

ஆனால் இந்த ஐ, ஔ-கள், அஇ, அய், அஉ, அவ் என்பனவாக வரிவடிவில் அமையும்போது ஒலி ஒப்புமை இருந்தாலும் வரிவடிவம் மாறிவிடுகின்றன.

இவைகள் மொழியாகும்போது அய், அவ் என்பன அய்யன், அவ்வை என வரிவடிவில் ஒன்றாய் இருப்பனபோல் அஇ, அஉ என்பன மொழிப்படுத்துங்கால் இவ்வடிவிலேயே அமையாமல் முதல் எழுத்தான அ மட்டும் உயிர்மெய் எழுத்தாய் மாறி நின்றே இகரத்தையும் உகரத்தையும் ஏற்கும். எடுத்துக்காட்டு; வ இரம், கஉந்தி.

இச்சொற்கள் உச்சரிப்பில் வை என்றும் கெள என்றும் உச்சரித்தாலும் (வைரம், கௌந்தி) வரிவடிவில் மாறியே உள்ளன என்பது கருத்து.

இவற்றுள்ளும் அதாவது அஇ, அஉ என்றும் அய், அவ் என்றும் கூறுவனவற்றுள் அய்,அவ் என்பதன் பயன்பாட்டைப்போல அஇ, அஉ, முற்றிலுமாகப் பயன்படாமல உள்ளன. ஆனால் அய், அவ் - பயன்பாட்டுக்குரியதாய், மொழியில் வாழ்வு பெற்றுள்ளன.

இவைபோலக் கோவலனைக் கண்ணகியும் மாதவியும் அடையாதபோதும் அடைந்தபோதும் தனித்துக் காணப்பட்டவர்கள் கோவலனைப் பிரிந்த நிலையில் அவர்களின் கோலங்கள் மாறிவிடுகின்றன என்பதிலும் ஒப்புமை உள்ளன. இந்நிலையில் இவர்களுக்குள் உள்ள ஓர் இன்றியமையாத வேறுபாட்டால் ஒருத்தியைவிட மற்றொருத்தி உயர்வை அடைவதென்பது ஐ, ஔ எழுத்துக்களின் பயன்பாட்டைப் பொறுத்தாக உணரமுடிகிறது.

ஐ போல் ஔ எழுத்தின் பயன்பாடு மிகுதியாக இல்லை; அருகியே உள்ளது.

அதனால்தான், அகரத் திம்பர் யகரப் புள்ளி, மெய்பெறத் தோன்றும் என வெளிப்படையாக ஐ எழுத்திற்கு அய் என வரும் என்பதாக நூற்பா செய்த தொல்காப்பியர், ஔ எழுத்து அவ் என்பதாக வரும் என நூற்பா செய்யாமல் விட்டுவிட்டதால் ஐ எழுத்தின் மிகுதியான பயன்பாடு தெளிவாகிறது. அய் என்பதற்கேற்ப அவ் என வரும் என உய்த்துணர வைக்கப்பட்டதால் ஐ – எழுத்திற்குள்ள முதன்மையும் தெரிகிறது.

இந்தக் கருத்து அனுமானத்திற்கேற்பவே காப்பிய நோக்கத்தைக் கண்ணகியைக் கொண்டு இளங்கோவடிகள், பத்தினித் தெய்வத்தைப் பரசல் வேண்டுமென்று மாதவியையும் கோவலனையும் பின்னுக்குத் தள்ளி கண்ணகியை முன்னிலைப் படுத்தினார்.

இந்த அடிப்படையில்தான் சிலப்பதிகாரம் என்றதும் கண்ணகியின் நினைப்பே சிந்தையில் முந்துவதன்றிப் பிற யாவும் பிந்துபவையேயாகும்.

ஆக, கூட்டெழுத்தான ஐ, ஔ–உயிர் நெடிலில் ஐ–எழுத்துக்குள்ள தனியிடம் போல் காப்பியத்தின் பெருங்கட்டாகக் கண்ணகியே உள்ளாள் என்பதாம்.

மேலும் ஔ - எழுத்துக்குள்ள அகராதிப் பொருள்களை விட ஐ - எழுத்துக்கே பற்பல பொருள்கள் உள்ளதால் மாதவியைப் போன்ற பாத்திரங்களுக்கெல்லாம் கூடுதல் தலைமையும் சிறப்பும் உடைய பாத்திரம் கண்ணகியே என்றாலும் தகும்.

---

# சேக்கிழாரின் புரட்சி உள்ளம்

(முனைவர். சரவணா இராசகோபாலன்)

நீலகண்ட யாழ்ப்பாணர் -மதங்க சூளாமணியார் பற்றிய புராணத்தில் சேக்கிழார், இறைவன் மூலமாகவும் திருஞானசம்பந்தர் மூலமாகவும் சில சமுதாய மாற்றங்களைக் குறித்துள்ளார்.

நீலகண்ட யாழ்ப்பாணர், தாழ்ந்த குலத்தில் பிறந்தவர். சிவனிடத்திலும் திருஞான சம்பந்தரிடத்திலும் ஆரா அன்பு பூண்டவர். இறவரைப் புகழ்ந்து பாடல்கள் புனைந்து யாழிலிட்டு இசைத்தவர். அவருடைய துணைவியார் மதங்க சூளாமணியார் குரலிசையால் இறைவரைப் பாடி மகிழ்வித்தவர். இருவரும் இணைந்தே தொண்டாற்றினர். சேக்கிழார் அவர்களுடைய குலத்தை நினைக்காமல் திருத்தொண்டினைப் போற்றினார். அம்முறையில் நான்கு சீர்திருத்தங்களைக் குறிப்பிட முடிகிறது.

1. தீண்டாமை தீவிரமாகப் பின்பற்றப்பட்ட சோழர் காலத்தில் தோன்றிய சேக்கிழார், பாண் இணையர்களை ஆலயத்திற்குள் புகச் செய்தார். திருவாலவாயமர்ந்தார் கோயிலில் தாழ்குலத்தவர் இறைவனைப் புறத்தே நின்று பாடவேண்டும், போற்றவேண்டும் என்ற நியதியை மாற்றி, இறைவர்தம் கருவறைக்கு எதிரில் நின்று பாண் இணையர் பாடத் தொண்டர்களிடம் ஆணையிட்டார். யாழ்ப்பாணர் அமர்ந்து யாழிசைக்கும்போது யாழ் தரையில் பட்டு குளிர்ச்சியால் கெடாமல் இருக்க, பொற்பலகை இடச் சொன்னார். திருவாரூர் இறைவராகிய தியாகேசர், வடக்கு வாயிலை உருவாக்கி, அதன் வழியாக வந்து யாழ்ப்பாணரும் பாடினியாரும் தம்முன் நின்று பாட வழிவகுத்தார். அவர்களுடைய போற்றிப்பாடலை அருகில் கேட்டு, செவிகுளிரும் பொருட்டு பாண்குலத்தவர்களைக் கருவறைக்கு அருகில் வரச் செய்தது பெரும் புரட்சியாகும்.

2. அந்தணர் குலத்தைச் சேர்ந்த திருஞான சம்பந்தருடன் பாண்இணையர் தொடர்பு கொண்டனர். ஞானசம்பந்தர் பாடிய பாடல்களுக்குப் பண்ணோடு பாடியும் யாழில் இசைத்தும் இறைவரையும் சம்பந்தரையும் உடனிருந்த அடியார்களையும் இன்புறுத்தினர். இன்று அந்தணர் குலத்தில் பிறந்து சைவ சமயத்தைச் சார்ந்தவர்களை "ஐயர்" என்று அழைக்கின்றனர். சேக்கிழார் "ஐயர்" என்ற சொல்லைக் குறிப்பிட்ட

சாதிக்கு உரியதாகக் கூறவில்லை. உயர்ந்தவர்களையும் பெருமைக்கு உரியவர்களையும் குறிக்க "ஐயர்" என்ற சொல்லைக் குறித்தார் "ஐ" வியப்பாகும் என்று தொல்காப்பியம் குறித்துள்ளது. சிவபெருமானைப் பல இடங்களில் ஐயர் என்று குறித்துள்ளார். (ஆறு சூடிய ஐயர், ஐயர் திருவடி நீழல்) வேட்டுவ இனத்தைச் சேர்ந்த கண்ணப்ப நாயனாரையும் புலையர் குலத்தில் பிறந்த திருநாளைப் போவாரையும் பாணர் குலத்தைச் சேர்ந்த நீலகண்ட யாழ்ப்பாணரையும் ஐயர் என்ற சொல்லால் குறித்தமை குறிப்பிடத்தக்கது. உயர்குலத்தவராகிய திருஞானசம்பந்தர், மறையவர்களை "ஐயர்" என விளிக்காமை சிந்திக்கத்தக்கது.

பிறப்பால் அந்தணர் குலத்தவராகிய சம்பந்தர், தீண்டத்தகாதவராகிய யாழ்ப்பாணரை முதன் முதலில் பார்த்து அவரை விளித்துப் பேசும் முதல் சொல் "ஐயரே" என்பதாகும். அவர் இணையரைத் திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்றார். உங்கள் இறைவர் முன் இங்கு யாழ் வாசியுங்கள்? என்றார். "அளவிலா மகிழ்ச்சியினார் தமைநோக்கி ஐயர்! நீர் உளமகிழ இங்கணைந்த உறுதியுடையோம்" என்று கூறினார்.

எருக்கத்தம் புலியூர் என்ற ஊருக்குச் சென்றவுடன் பாணர், பிள்ளையாரைப் பரவித் தொழுது, "இப்பதி அடியேன் பிறந்த ஊர்" என்று கூறவும், பிள்ளையார், "ஐயர்! நீர் அவதரித்திட இப்பதி அளவில் மாதவம் முன்பு செய்தவாறு" என்று அவ்வூரிலுள்ள அனைவரும் கேட்குமாறு கூறினார் என்று சேக்கிழார் பாடியுள்ளார். தருமபுரம் சென்றபோது நிகழ்ந்த நிகழ்ச்சியைச் சேக்கிழார் கூறும் முறை வியப்பானது. பாணர், உறவினர் செய்த தவற்றை அறிந்து நடுங்கிப் பிள்ளையாரிடம் யாழில் அடங்காத பண் ஒன்றைப் பாடியருளுமாறு வேண்டினார். பிள்ளையும் "மாதர் மடப்பிடி" என்ற பதிகத்தைப் பாடினார். பாணரால் அதனை யாழில் அடக்க முடியவில்லை. உடனே அவரைக் குறைவாக மதிக்கச் செய்த யாழை முறிக்க விரும்பினார். அப்போது அவரைத் தடுத்தருளிய சம்பந்தர்,

"ஐயரே! உள்ள இசை அளவினால் நீர் ஆக்கிய இக்கருவியினைத் தாரும்" என்று கூறிக் கையில் வாங்கி, "ஐயர் நீர் யாழ் இதனை முறிப்பது என்?" என்று கேட்டு "நீர் முன்போலவே இதனை வாசித்தருளும்" என்று சொல்லி ஆறுதல் கூறினார்.

3. திருஞான சம்பந்தரிடம் அன்பு பூண்டவர் திருநீலநக்கநாயனார். அவர் வேதியர் குலத்தில் பிறந்தவர். வேள்வித் தீயை வளர்ப்பவர். திருஞான சம்பந்தரின் திருமணத்தில் வேள்விச் சடங்குகளைச் செய்தவர்.

அவர்,

*"நீடு சீர்த்திரு நீலகண்டப் பெரும்பாணர்*
*தோடு உலாம்குழல் விறலியார் உடன்வரக்*
*கூடும் அப்பெருங் குழாத்தொடும் புகலியர் பெருமான்*
*மாடு வந்தமை கேட்டு உளம்மகித் நீலநக்கர்"*

என்று சேக்கிழார் பாடியுள்ளார். அவர்தம் துணைவியாருடன் சாதிவேறுபாடு கருதாமல் அனைவருக்கும் அமுதூட்டினார். சீர்காழி வள்ளலாருக்கும் பாண் இணையருக்கும் அமுது உண்பித்தார். "சமபந்தி போஜனம்" என்று இக்காலத்தில் குறிப்பிடுவதைத் திருநீலநக்கர் அன்றே நடத்திக் காட்டினார்.

அன்று இரவு பாலறாவாயர், திருநீலநக்கரிடம் "இன்று தங்க ஓர் இடம் கொடுத்தருள்வீர்" என்று கூறினார். அதைக்கேட்டு மகிழ்ந்த திருநீலநக்கரும் அவர் துணைவியாரும் பாண் இணையர்கள் பள்ளிகொள்ள, "நடுமனை வேதியின் பாங்கர், இடம் கொடுத்ததை அறியும்போது வியப்பு ஏற்படுகிறது. பாண் குலத்தினரை உயர்குலத்தினர் வீட்டில் சேர்க்க முடியாத சூழ்நிலை இருந்த காலகட்டத்தில், அவர் பாண்தம்பதியர் புறங்கிடையிலோ ஒதுக்கிடத்திலோ பள்ளி கொள்வதை விரும்பவில்லை. மாறாக, நடுமனையில் வேள்விக் குண்டத்தின் அருகில், பாண் இணையர்களுக்கு இடம் அளித்தமை வியப்புக்குரியது. திருஞானசம்பந்தரிடமும் பாண் இணையர்களிடமும் அவர் கொண்ட அன்பையும் மதிப்பையும் உணர்த்துகிறது. இச்சூழ்நிலையை விளக்கவந்த சேக்கிழார்,

*"ஆங்கு வேதியல் அறாதசெந் தீவலம் சுழிவுற்று*
*ஓங்கு முன்னையில் ஒருபடித்து அன்றியே ஒளிரத்*
*தாங்கு நூலவர் மகிழ்வுறச் சகோடயாழ்த் தலைவர்*
*பாங்கு பணியா ருடன்அரு ளால்பள்ளி கொண்டார்"* (31)

என்று அருளியமை வியக்கத்தக்கது. நாயன்மார் காலத்தில் சாதி வேற்றுமையும் தீமையும் அதிகமாக இருந்தது. அக்கொடுமைகளை ஒழிக்கவே நாயன்மார்கள் தோன்றினார்கள். யாழ்ப்பாணர் மனைவியாருடன் வேதிகையின் பக்கத்தே பள்ளி கொள்ள, ஓமத்தீயானது முன்னையினும் எழுந்து ஓங்கிச் சுழன்றதாகச் சேக்கிழார் கூறியமை உணரத்தக்கது.

4. திருஞானசம்பந்தரின் திருமணம், மறைகுலத்தவரின் திருமணம். மறையவர்கள் குழுமிய திருமணம். திருநீலநக்கர் வேள்விச் சடங்கைச் செய்தார். அந்தத் திருமணத்தில், ஞானசம்பந்தர், மணமகளுடன்

இறைவனிடம் சேரவிரும்பினார். இறைவனிடம்,

*"நாதனே நல்லூர்மேவும் பெருமண நம்பனேஉன்*
*பாத மெய்ந்நீழல் சேரும் பருவம் ஈது என்று"*

வேண்டினார். அதைக்கேட்ட இறைவன், திருமணத்திற்கு வந்தோர் அனைவரும் சோதிவடிவான தன்னுள் ஒடுங்க அருளினார். அங்குச் சோதியில் கலந்தவர்களில் "ஆர்திரு மெய்ப்பாணரும் மதங்க சூளாமணியாரும்" கலந்தனர். சாதி ஏற்றத்தாழ்வு இல்லாமல், உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வேறுபாடு இல்லாமல் அனைவரும் மணமக்களுடன் சோதியில் கலந்தனர்.

*"அணிமுத்தின் சிவிகைமுதல் அணிதாங்கிச் சென்றோர்கள்*
*மணிமுத்த மாலை புனைமடவார் மங்களம் பெருகும்*
*பணிமுத்தும் எடுத்தார்கள் பரிசனங்கள் வினைப்பாசம்*
*துணிவித்த உணர்வினராய்த் தொழுது உடன்புக்கு"*

என்று சேக்கிழார் அருளியுள்ளார். சாதி வேற்றுமை ஏற்றம் பெற்றிருந்த சோழர் காலத்தில், சாதிவேற்றுமையற்ற சமுதாயத்தைக் காண விரும்பிய சேக்கிழாரின் புரட்சி உள்ளத்தைக் கலை இணையரின் மூலம் உணர முடிகிறது.

---

## அன்பான வேண்டுகோள்!

சமுதாய மாமுனிவராகத் திகழ்ந்த நமது அருள்நெறித் தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் ஆழமான சிந்தனைகளை அடியொற்றி நடைபோடும் "மக்கள் சிந்தனை" மாத இதழ் மேலும் பலம் பெறுவதற்குத் தங்களின் ஆதரவு தேவை. நமது கருத்து பரவலாக மக்களைச் சென்றடைய இதழ் அவசியம்.

ஆயுள் சந்தாவாகவோ; அல்லது ஆண்டுச் சந்தாவாகவோ அல்லது புரவலர் தொகையாகவோ மக்கள் சிந்தனை இதழுக்கு வழங்கி மக்களின் சிந்தனைகளை அகம்கொண்டு வெளிவர உதவுங்கள். "மக்கள் சிந்தனை"யின் பணி சிறப்புடன் தொடர வாசகராக, படைப்பாளராக சந்தாதாரராக விளம்பரதாரராக மாறுங்கள்; இன்றே சமய சமுதாயப் பணியை வலிமைப்படுத்துங்கள்.

– ஆசிரியர்

# உள்ளன்பு இப்படித்தான் உசாவும்

## குருமகாசந்நிதானம் அவர்களின் கனிந்த பேரன்புக்கு ஓர் அடையாளம்

கடந்த 2017 நவம்பர் 27-ஆம் நாள் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் சார்பில் வள்ளல் அழகப்பர் நினைவு அருங்காட்சியகம் திறப்புவிழா. விழாவில் பங்கேற்ற பிறகு தவத்திரு அடிகள் துணைவேந்தர், மாவட்ட ஆட்சியர் ஆகியோருடன் உரையாடிக்கொண்டிருந்தார்கள். விழாவுக்கு நானும் சென்றிருந்தேன். அடிகளுக்கு அருகில் சென்று வணக்கம் தெரிவித்தேன்.

குன்றக்குடி ஆதீனக் கவிஞர் அண்ணன் பரமகுரு அவர்கள் சிறிது உடல் நலிவுற்று, பின்னர் நலம்பெற்று ஓய்வில் இருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டிருந்தேன். குன்றக்குடிக்குச் சென்று கவிஞர் அண்ணன் அவர்களை நேரில் சந்திக்க வாய்ப்பு அமையவில்லை. எனவே, வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, அடிகள் பக்கம் சிறிது நெருக்கமாக நின்று கேட்டேன் :

"அண்ணன் பரமகுரு நலமாக இருக்கிறார்களா சாமி"

அடிகளுக்கு மட்டுமே கேட்குமாறு மிகவும் மெதுவாகவே பேசினேன். சுற்றி நிற்போர் பலரே ஆயினும், அருகில் நிற்பது "மடத்து ஆள்" நானல்லவா! எனவே சுவாமிகளுக்கு ஐந்து பேர் அறிவும் செவிகளே கொண்டன போலும்! என்பக்கம் சிறிது நகர்ந்து "நலமாக இருக்கிறார்கள்" என்று புன்முறுவல் பூத்தபடி தெரிவித்தார்கள்.

நான் கேட்டது கிடைத்துவிட்டது; ஆனாலும் கவிஞர் அண்ணன் பற்றிக் கூடுதலாக ஒரு நற்செய்தி அடிகள் சொல்லமாட்டார்களா? என்ற ஏக்கமாக என் நெஞ்செல்லாம் நிரம்பி முகத்தில் வழிந்துகொண்டிருந்தது. அருங்காட்சியகம் திறப்பு விழா முடிந்து, தொடர் நிகழ்வாக அடுத்து இந்திய – ஆசியன் கவிஞர்கள் விழா நடைபெறுகிறது. துணைவேந்தர், பேராசிரியப் பெருமக்கள், பல்கலைக்கழக அலுவலகப் பொறுப்பாளர்கள் என்று அனைவரும் சூழ்ந்துவர, அடிகள் புறப்படும் நேரம்; நான் நின்று கொண்டிருந்த திசை நோக்கி அடிகள் திரும்பினார்கள்; அவர்களும் பார்த்தார்கள்; நானும் பார்த்தேன்; அவர்களது பார்வை என் உள்ளத்தை ஊடுருவிப் பார்த்த பார்வை; "நம்முடைய திருமடத்து ஆள், இந்தப் பேராசிரியர் வேறு என்னவோ எதிர்பார்த்து நிற்கிறார்" என்று மின்னல்

கீற்றைப் போல நினைவு ஓடிய அடிகள், "நமது பரமகுரு இப்போது அலுவலகம் வருகிறார்கள்" என்று சொல்லி, மென்மையாய் ஒரு புன்முறுவல் பூத்துவிட்டு நடந்தார்கள்! "நடந்தாய், வாழி, அடிகாள்" என்று வாழ்த்திக்கொண்டே நானும் நடந்தேன்.

தவத்திரு அடிகளின் பேரன்புக்கு, இது ஓர் அரிய அடையாளம்; "அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்?" என்ற குறளுக்கு நான், நேரடியாகக் கண்டறிந்த புதிய உரை.

– மு. பழனி இராகுலதாசன்

முனைவர். **நயம்பு. அறிவுடைநம்பி** அவர்கள் "**குறளாய்வு மாமணி**" விருது பெற்றார்.

08.12.2017ல் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகமும், திருவில்லிபுத்தூர் செந்தமிழ் அறக்கட்டளையும் இணைந்து "இலக்கியங்களில் அறிவியல்" என்ற தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கினை நடத்தின. செந்தமிழ் அறக்கட்டளைப் பொறுப்பாளர்கள் முனைவர்.க. சிவனேசன், கவிஞர் சுரா முதலியோர் முன்னிலையில் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் க. பாஸ்கரன் அவர்கள் தமிழகத்தில் அதிகமான ஆய்வுக் கட்டுரைகள் வாசித்தமைக்காக முனைவர்.நயம்பு. அறிவுடைநம்பி அவர்களுக்கு "குறளாய்வு மாமணி" என்னும் விருதளித்துப் பாராட்டினார். மக்கள் சிந்தனை வாழ்த்தி மகிழ்கிறது.

– ஆசிரியர்



சதுர்வேதமங்கலம்

## அருள்தரு ஆத்மநாயகி அம்பாள் உடனுறை ருத்ரகோடீசுவரர் திருக்கோயில்

மாசிமகப் பெருந்திருவிழா

ஏவிளம்பி மாசி 8 முதல் மாசி 17 வரை

(20.02.2018 - 1.3.2018)

# அழியாத உயிர் மூலம் கண்ட அருளாளர் திருமூலர்

(புலவர். ச.மு. விமலானந்தன்)

திருமூலர் இயற்றிய திருமந்திரம் சைவசமயம் சார்ந்த நூல். இது 12 திருமுறைகளுள் பத்தாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது. சமய மறுப்பாளரும் இது சமய நூல் என்றே கூறுகின்றனர். அறிஞர் அண்ணா இதில் வரும் "ஒன்றே குலம்; ஒருவனே தேவன்" என்ற தொடரை மக்களிடம் பரப்பினார். அதனால் சிலர் இத்தொடரைக் கூறியவர் அண்ணா என்றே கருதுகின்றனர். சிலர் இதில் வரும் "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற அடியை ஏற்றுப் போற்றினர். இவற்றைப் போல் திருமந்திரத்தில் ஏற்கத்தக்க கருத்துகளும், தொடர்களும் உள்ளன.

"தமிழ்ச் சமயம்" என்று ஒன்று இல்லை. தமிழர் பல சமயங்களைச் சார்ந்துள்ளனர். பெரும்பாலான தமிழர் சைவத்தையும், வைணவத்தையும் சார்ந்துள்ளனர். சிலர் வள்ளலார் வலியுறுத்திய சமயங்களைக் கடந்த, சமயங்களைச் சாராத சுத்த சமரச சன்மார்க்கக் கொள்கையை ஏற்றுள்ளனர்.

"மந்திரம்" என்ற சொல்லைத் தொல்காப்பியம் "நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரம்" என்றும், திருக்குறள் "நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டி விடும்" என்றும் எடுத்தாண்டுள்ளார். பிற தமிழ் நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

திருமந்திரம் பத்தாம் திருமுறையாக வைக்கப்பட்டிருப்பதைக் கொண்டும், மொழி நடையைக் கொண்டும் திருமூலர் காலம் 9 ஆம் திருமுறையில் இடம் பெற்றுள்ள 9 பேருக்கும் பிற்பட்டவர் என்றும், 11ஆம் திருமுறையில் இடம் பெற்றுள்ள 11 பேருக்கு முற்பட்டவர் என்றும் கொள்ளலாம்.

"இறை" என்பது உணர்ச்சி அன்று; கண்களால் காணக்கூடிய பருப்பொருள் அன்று; உருவமற்றது; உள்ளத்தால் உணரக்கூடியது.

இறை என்பது உயிருக்கு உயிராய் இருப்பது; தாயுமானவர் கூறியபடி அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது; உருவமற்றது. இறை உணர்வுப் பொருளே என்று திருமூலர் மட்டுமன்று பல அருளாளர்களும் அருளி உள்ளனர்.

இறைவன் "சரக்கு" அன்று. இறையைக் கடக்க முடியாது. சந்திக்கவும் (காண) முடியாது. உள்ளத்தால் உணரத்தான் முடியும். கற்பனைக் கடவுளுக்குத்தான் "போக்கு வரவு" உண்டு. இறை என்றும் இருப்பது. ஆதி அந்தம் அற்றது. உண்மையான இறைக்கு போக்கு வரவு இல்லை. இதை மணிவாசகர் "போக்கு வரவு இலன்" என்கிறார்.

"உடம்பினுக்குள் உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான்"

என்று திருமூலர் கூறுகிறார். ஆனால் வள்ளலார் முதலிய அருளாளர்கள் பக்குவப்பட்ட தூய உள்ளத்தில் தான் இறைவன் இருப்பான் எனக் கூறுகின்றனர்.

"உடம்பார்" எனத் தொடங்கும் பாடலின் ஆழ்ந்த பொருளை அறியாமல் (பாரதியார் ஆழ்ந்த கவியுளம் காண்கிலார் என்று பாடியது போல) உயிர் அழியும் எனத் தவறான பொருளைக் கொள்ளக் கூடாது. உயிர் அகலும் எனப் பொருள் கொள்ளல் வேண்டும். உயிர் அழியாது - ஆன்மா அழியாது என்பது ஏனைய அருளாளர்களைப் போலத் திருமூலருக்கும் தெரியும். "உடலில் உயிர் உள்ள போதே உயிரின் பயனாகிய ஞானத்தைப் பெற்றுவிட வேண்டும்" என்ற ஆழ்ந்த கருத்திலேயே திருமூலர் இந்தப் பாடலைப் பாடியுள்ளார்.

பாடலின் பொருளை மேம்போக்காகப் பார்த்துவிட்டுத் திருமூலர் உயிர் அழியும் என்று கூறியுள்ளார் என்பது அவருக்கு இழுக்கு சேர்ப்பதாகும்.. தமிழ் அருளாளர்கள் உள்பட எல்லா அருளாளர்களும் உயிர் (ஆன்மா) அழியாது என்றே கூறியுள்ளனர். அந்தக் கருத்தையே உபநிடதங்கள் கூறுகின்றன. எனவே உயிர் அழியும் எனப் பொருள் கொள்வது தவறு.

சைவ சித்தாந்தமும் உயிர் அழியாதது என்றே கூறுகிறது. பாமர மக்களும் உயிர் (உடலைப் பிரிந்து) போய்விட்டது என்றே கூறுகின்றனர். உயிர் அழிந்துவிட்டதே என்று கூறுவதில்லை. மேலும், திருமூலர் உடம்பைக் கோயிலாக உருவகப்படுத்துகிறார். உள்ளம் பெருங்கோயில் என்றும் சீவன் சிவலிங்கம் என்றும் உருவகிக்கிறார். அந்த சீவன் – உயிர் எப்படி அழியும்?

எனவே திருமூலர் உயிர் அழிவதில்லை என்ற வாதத்தை எடுத்தெறியவில்லை என்பதை அறியலாம். உயிருக்கு அழிவில்லை. ஆத்மாவுக்கும் அழிவு இல்லை.

உயிரையும், ஆன்மாவையும் (ஆத்மாவையும்) ஒரே பொருளில் சிலர் எடுத்தாண்டுள்ளனர். ஆனால் இரண்டுக்குமிடையே சிறு வேறுபாடு உள்ளது. உடலை இயங்கச் செய்வது உயிர். அது உடலில் இருக்கும் போது உயிர் எனப்படுகிறது. அதுவே உடலைவிட்டு வந்த பிறகு "ஆன்மா" எனும் பெயர் பெறுகிறது. அதனால்தான் இறந்தவருக்கு அனுதாபம் தெரிவிக்கும்போது "ஆன்மா சாந்தி பெறுக" என்று கூறுகிறோம். (உயிர் சாந்தி பெறுக என்று சொல்லும் மரபில்லை). ஆன்மாவைப் பற்றிச் சொல்வதுதான் ஆன்மீகம் ஆகும்.

சிலேட்டுமம், பித்தம், வாதம் ஆகியவை உடல் என்ற எந்திரத்தின் எரிபொருள்கள் அல்ல. திருவள்ளுவர் "மருந்து" என்ற அதிகாரத்தில் "வளி முதலாகிய மூன்றும்" என்கிறார். சித்த மருத்துவத்தில் நாடி பார்த்து இந்த மூன்றின் அளவைக் கண்டறிந்து அதற்கேற்ப மருத்துவம் செய்யப்படும்.

திருமூலர் கூறும் காற்றைப் பிடிக்கும் கணக்கறிவை இன்றைய மருத்துவ அறிவியல் கூறவில்லை. காற்றைப் பிடிக்கும் கணக்கறிவின்படி எவரும் காற்றை உள்ளிழுப்பதும், விடுவதும் இல்லை. அதன்படி செய்வதும் அரிது.

பூரகம், கும்பகம், இரேசகம் ஆகிய சொற்கள் தமிழ்ச் சொற்களாய் இல்லாமையால் இந்த மூச்சுப் பயிற்சி தமிழர் மரபன்று. மேலும் திருமூலர் கூறியுள்ளபடி சிறிது நேரம் மூச்சுப் பயிற்சி செய்யலாம். காற்றை உள்ளிழுத்து வெளிவிடும் செயல் நாள் முழுவதும் நடப்பது அரிது. இயங்குதசையால் நடப்பது. (இயக்கு தசையன்று).

உயிரியக்கத்தின் வழியே காற்றும், காற்றியக்கத்தின் வழியே உயிரும் ஒன்றுக்கொன்று பரிமாறிக்கொள்வது உயிர் மூலம். எனவே, உயிர் மூலம் கண்ட திருமூலர் என்று கூறுவதே பொருத்தமாகும்.

---

> வீட்டு ஈயானது ஒரு சமயம் அழுகிய புண்ணின் மீதும் மறுகணம் நிவேதனத்துக்கு வைத்திருக்கும் பொருளின் மீதும் உட்காரும். ஆனால் தாமரையில் தேனருந்தும் வண்டு அதைத் தவிர வேறு ஒன்றின் மீதும் அமராது. நீங்கள் வீட்டு ஈயைப் போல் இருக்காமல் தேன் வண்டைப் போல் இருங்கள். நல்லவற்றையே நாடிச் செல்லுங்கள்.
>
> – இராமகிருஷ்ண பரமஹம்சர்

# திருஞானசம்பந்தர் தேவாரத்தில் சைவசித்தாந்தக் கோட்பாடு

(தருமையாதீனப் புலவர். தா. குருசாமித் தேசிகர்)

திருஞானசம்பந்தர் தமிழின் மெய்யுணர்வாகிய சைவ சித்தாந்தக் கோட்பாடுக்கு, தேவார இலக்கியம் மூலமாக இசைத்தமிழில் குறிப்பிடுவது அறியத்தக்கது. இத்தத்துவ ஒழுங்குகளை முன்பே திருவள்ளுவர் மெய்யுணர்தலில் குறிப்பாக விளக்கினாலும் தெளிவாக விளக்கி அருளியவர் ஆளுடைய பிள்ளையாரே ஆவார். திருவள்ளுவர் பதி பசு பாசம் என்ற கோட்பாட்டை "ஆதிபகவன் முதற்றே உலகு" என்று முப்பொருள் உண்மையினை முதலில் முன்மொழிந்த "பதி இலக்கணம்" பற்றியதை திருஞானசம்பந்தர் பல இடங்களில் அருளிச் செய்துள்ளார்.

"அந்தமாயுலகாதியுமாயினான்
வெந்த வெண்பொடி பூசிய வேதியன்
சிந்தையே புகுந்தான் திருவாரூரெம்
எந்தை தானெனை யேன்று கொளுங்கொலோ"

இத்திருவாரூர்ப்பாடல், இறைவனின் பதிமுது நிலையைச் சுட்டுவது சிந்திக்கத்தக்கது. "அகரமுதலானை" என்றும் அருளுவர்.

**பசுக்கோட்பாடு :**

"உயரவை நிலை" என்ற தலைப்பில் உயிர்கள் பல என்பதற்கு உமாபதிசிவம் திருமுறைப் பாடல்கள் மூலம் பல செய்திகளைத் தொகுத்துத் தந்துள்ளார். திருஞானசம்பந்தர் உயிர்கள் பல என்பதையும் அவை இறைவன்போல அனாதி என்பதையும் பல இடங்களில் சுட்டிச் செல்வர். திருப்பனையூர்ப் பாடல் உயிர்கள் பல என்பதை உணர்த்தும்.

"அலரும் எறிசெஞ்சடைதன்மேல்
மலரும் பிறையொன்றுடையான் ஊர்
சிலர் என்னும் இருந்தடியேனைப்
பலரும்பரவும் பனையூரே"

உயிர்கள் வழிபாட்டின் மூலம் வினைநீக்கம் பெற்று வாழலாம் என்பது தமிழர் கோட்பாடு. அக்கோட்பாட்டை திருவள்ளுவர் இருள்சேர் இருவினை என்ற குறளில் குறிப்பிடுவார். கடுவினைப் பாசக் கடல் கடக்க உயிர்கள் பூசனை ஜெபம் முதலிய தவச் செயல்கள் மூலம் – வழிபாட்டின் மூலம் நன்மை எய்தலாம் என்றும் சம்பந்தர் தேவாரம் அறிவுறுத்தும். ஒரு பாடல்மூலம் வழிபாட்டின் கோட்பாட்டைத் தெரியலாம்.

"தந்தையார் போயினார் தாயரும் போயினார்
தாமும்போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார்
பார்க்கின்றார் கொண்டு போவார்
எந்தநாள் வாழ்வதற்கே மனம் வைத்தியால்
ஏழைநெஞ்சே!
அந்தணாரூர் தொழுது உய்யலாம் – மையல்
கொண்டு அஞ்சேல் நெஞ்சே!" – என்ற பாடலால் உயிர்களின் நெஞ்சுக்கு நீதி சொல்வது போல் உய்யும்வழி காட்டி வினைநீக்கம் செய்ய வழிகாட்டுகிறார்.

**பாசக் கோட்பாடு :**

இதனை உமாபதிசிவம் "இருள்மலநிலை" என்று பாசக்கோட்பாட்டைப் பகர்வார். உயிரறிவை மறைத்து அணுத்தன்மைப்படுத்தும் அகவிருளாகிய ஆணவ மலத்தின், இயல்பினைச் சம்பந்தர் பல பாடல்களில் விளக்கம் செய்வார்.

"ஒள்ளியர் தொழுதெழ வுலகினில்
உரைசெயும் மொழிபல
கொள்ளிய களவினர் குண்டிகையவர்
தவம் அறிகிலார்
பள்ளியை மெய்யெனக் கருதன்மின்
பரிவொடு பேணுவீர்
வெள்ளிய பிறையணி சடையினர்
வளநகர்விளமரே"

இப்பாடல்மூலம் ஆணவ மலமுடைய அமணர் மூலம் பாசுநீக்கம் பெறமுடியாது என அருளுவார்.

"ஒள்ளியர்" என்பது தெளிந்த ஒழுக்கமும் அறிவும் உடையவர். அதனைச் சிவப்பிரகாசம் எனலாம். "மொழி பலகொள்ளிய களவினர்" என்ற தேவாரவரி, ஆணவம் வலிஉடைய அமணரைக் குறிக்கும். வடமொழி தமிழ்மொழி முதலிய பலமொழிகளிலும் உள்ள உயர்ந்த பொருள்களைக் களவு செய்து தம்மதாகக் காட்டும் திருட்டுத்தவம் உடையவர். இவர்களை நம்பிப் பாசநீக்கம் பெறமுயல்வது முயற்கொம்பு என்று எச்சரிக்கை செய்வார். பாச நீக்கம் – சிவப்பேறுபெற உயிர்களுக்கு சிவநாமம் உறுதுணை என்றும் சம்பந்தர் அறிவுறுத்துவார்.

"மெய்யராகிப் பொய்யை நீத்து வேதனையைத் துறந்து
செய்யரானார் சிந்தையானே தேவர்குலக் கொழுந்தே
நைவன் நாயேன் உன்றன் நாமம் நாளும் நவிற்றுகிறேன்
வையம்முன்னே வந்துநல்காய் வலிவலம் மேயவனே"

இப்பாடல் சிவனை அடையும் சாதனங்களில் "ஐந்தெழுத்து" ஒன்று என்பதனைச் செவியறிவுறுத்துவது சிந்திக்கத்தக்கது.

**இறைவன் அருளும் கோட்பாடு :**

இறைவன் உயிர்கட்டு ஒன்றாய், வேறாய், உடனாய் இருந்து அருளிப்பாடு செய்வான் என்பது சைவ சித்தாந்தக் கோட்பாடு. இதனைச் சம்பந்தர் திருவீழிமிழலைத் தேவாரத்தில் நன்கு அடையாளங் காட்டுகிறார்.

"ஈறாய் முதல் ஒன்றாய் இருபெண்ணாண் குறைமூன்றாய்
மாறாமறை நான்காய் வருபூதமவை ஐந்தாய்
ஆறார் சுவை ஏழிசை யோடு எட்டுத் திசைதானாய்
வேறாய் உடன் ஆனான் இடம் வீழிமிழலையே" இப்பாடல் சைவ சித்தாந்தக் கோட்பாட்டின் உச்சமாகும். தானாய் என்பது ஒன்றாய் என்பது. உயிரோடு ஒன்றாகியும், வேறாகியும் உடனாகியும் இறைவன் விளங்குவான் என்பது சித்தாந்த சாத்திரத்திற்கு ஆமூலமாகியது.

இப்பாடற்கு நம்தருமையாதீன திருவாமூர்கொண்ட 26–ஆவது குருமகாசந்நிதானமவர்கள் "குருவருள்" என்ற அருளிப்பாட்டில் பதிவு செய்த அருளிப்பாடு அறியத்தக்கதாம்.

"இப்பாடலில், ஈறாய் என்பது முதல் எட்டுத்திசை
தானாய் என்பது முடிய, இறைவன் அவையே
தானேயேயாய்ப் பிரிப்பின்றி
உடலும் உயிரும்போல் ஒன்றாயிருந்து உதவுவது
போல், இறைவன் வேறாயிருந்து அருள்புரியும்
நிலையையும், கண்ஒளி ஒருபொருளைப் பார்த்தாலும்
அக்கண் ஒளியுடன் உடனாய் உயிர்கலந்தாலன்றி,
கண்காணாதவாறு போல, இறைவன் உயிர்களுடன்
உடனாயிருந்து அருள்புரியும் நிலையையும்
உணர்த்துகின்றார் ஞானசம்பந்தர்"

இவ்வாறு, நமது குருபிரான், காணும் ஒளியாகிய கண்ணுக்குக் காட்டும் ஒளியாகிய சூரியன் வேறாயிருந்து உதவுவதுபோல் இறைவன் வேறாயிருந்து அருள்புரியும் நிலையை நன்கு விளக்கி அருளியுள்ளார்.

இறைவன் குருவாக வந்து உபசரிப்பதை அகத்தியர் தேவாரத் திரட்டில், "தோடுடைய செவியன்" என்ற பதிகம் மூலமாகவும் திருக்கோயில் வழிபாட்டை "ஆரூர்தில்லை அம்பலம்" என்ற பதிகம் மூலமாகவும், அடியவர் கோட்பாட்டை "வேயுறு தோளிப்பங்கன்" பதிகம் மூலமாகவும், குருலிங்க சங்கமக்கோட்பாட்டை சம்பந்தர் பதிகம் மூலமாகவும் காணலாம். வாது செய்த பதிகமாகிய திருப்பாசுரத்தில் "அற்றன்றி மதுரைத் தொகை ஆக்கினானும் தெற்றென்று தெய்வம் தெளியாத" வர்க்கு, பற்றின்றி ஓதிய திருப்பாசுரப் பதிகம் முழுவதும், "பாண்டியன் கேட்க கிளந்த மெய்ஞ்ஞானம்" என்று அருணந்தி சிவம் அடையாளம் அருளுவர். பன்னிரண்டு திருமுறைகளின் பிழிவே சிவஞானபோதம் என்று அருளுவர். திரு.க. வச்சிரவேல் முதலியார். அவர்களின் திருவுளக் கிடக்கையின் முன்னோடியாக திருஞானசம்பந்தர் பாடலில் சைவசித்தாந்தக் கோட்பாட்டை ஓரளவுகாண இக்கட்டுரைமூலம் குருவருள் பெறலாம்.

---

குன்றக்குடி

## அருள்தரு சண்முகநாதப் பெருமான் திருக்கோயில்

## தைப்பூசத் திருவிழா

குன்றக்குடி திருத்தலத்தில் கண்கண்ட தெய்வமாய் எழுந்தருளியிருக்கும் அருள்தரு சண்முகநாதப் பெருமானுக்கு, தைப்பூசத் திருவிழா திருவள்ளுவராண்டு 2049 ஏவிளம்பி ஆண்டு தைத்திங்கள் 9-ஆம் நாள் (22.1.2018) காலை கொடியேற்றத்துடன் துவங்கி 10 நாட்களும் நாதசுர இன்னிசையுடன் அருள்தரு சண்முகநாதன் திருவீதியுலாவந்து சிறப்பாக நடைபெற்றது.


9-ஆம் நாள் தேர்த் திருவிழாவில் நாட்டார்கள், மெய்யன்பர்கள் பெருந்திரளாக வந்து வடம்பிடித்தனர். 10-ஆம் நாள் மயூரகிரி புஷ்கரணி, தீர்த்தவாரி, தேனாற்று தீர்த்தவாரியிலும் சுற்று கிராமத்தினர் பங்கேற்றனர்.

பால்குடம், காவடி எடுத்து மெய்யன்பர்கள் பலர் வேண்டுதலை நிறைவு செய்தனர்.

# உலகத் திருக்குறள் பேரவைப்

## பொதுச் செயலாளர்

# புலவர். தி.சு.மலையப்பன் காலமானார்




உலகத் திருக்குறள் பேரவைப் பொதுச் செயலாளராக இருபது ஆண்டுகளுக்கு மேல் தொண்டாற்றி வந்த புலவர்.தி.சு. மலையப்பன் அவர்கள் 5.1.2018இல் காலமானார். உலகத் திருக்குறள் பேரவைப் பணியைத் தன் மூச்சாகக் கொண்டு உழைத்த அப்பெருமகனாரின் மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

நமது ஆதீனம் 46ஆவது குருமகாசந்நிதானம் தவத்திரு பொன்னம்பல அடிகள் பெருமானால் "திருக்குறள் செம்மல்" விருதுபெற்ற பெருமையர் அவர். அவர்தம் மறைவுக்கு "மக்கள் சிந்தனை" வருந்துகிறது.

மறைந்த "திருக்குறள் செம்மல்" தி.சு. மலையப்பன் அவர்களின் நல்லுயிர் இறைவன் திருவடி நீழலில் இன்ப அமைதி பெறப் பிரார்த்தனை.

– ஆசிரியர்

# தூத்துக்குடியில் "கம்பன் ஓர் பார்வை" கருத்தரங்கம்




உலகத் திருக்குறள் பேரவை தூத்துக்குடிக் கிளையின் மாதாந்தரக் கருத்தரங்கம் சி.எம். மேனிலைப்பள்ளி அரங்கில் காமராஜ் கல்லூரி முன்னாள் பேராசிரியர் குமரிக் கண்ணன் தலைமையில், மாவட்ட வருவாய் முன்னாள் அலுவலர் சக்திவேல், ஆசிரியர் மனோசேவியர் முன்னிலையில் நடைபெற்றது.

உலகத் திருக்குறள் பேரவையின் தூத்துக்குடி மாவட்டக் கிளையின் செயலாளர், மோ.அன்பழகன் வரவேற்றுப் பேசினார்.

கம்பன் ஓர் பார்வை எனும் தலைப்பில் கல்வித்துறை மாவட்டக் கிளையின் செயலாளர் மோ.அன்பழகன வரவேற்றுப் பேசினார்.

பாபநாசம் திருவள்ளுவர் கல்லூரியின் முன்னாள் முதல்வர் பொற்கிழிக் கவிஞர், பேராசிரியர் ச. சவகர்லால் பாரதியார்பற்றி உரையாற்றனார்.

மருத்துவர் தா. இராசலிங்கம் திருக்குறளில் இன்பத்துப்பால் எனும் தலைப்பில் குறள் உரை வழங்கினார்.

கூட்டத்தில் எ.பி.சி. மகாலெட்சுமி கல்லூரி முன்னாள் தமிழ்த்துறைப் பேராசிரியர் குருலெட்சுமி, செய்யதுமுகமது செரிப், தனபாலன், திருக்குறள் அறிவுச்செல்வம், தபராசு, தாழைமணி, தினகரன் மற்றும் பேரவை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

கவிஞர் இளமுருகு நன்றி கூறினார்.

# பொன்னம்பலத்தாரைப் போற்றுவோம்!

(காப்பியக் கவிஞர்.நற்றமிழ் நாவலர். கவிஞர்கோ. நா. மீனவன்)

மன்றாடும் சிவபெருமான் மகனான திருமுருகன்
குன்றான திருநகராம் குன்றாக் குடியமர்ந்த
சண்முகனும் தமிழ்கேட்கச் சாதனைகள் செய்தமடம்
ஆதீனம் திருநீறு அரகரா குருபூசை
வழிபாடு என்கின்ற வழியிலே சென்றமடம்
சமுதாயத் தொண்டினிலும் சாதனைகள் செய்திடலாம்
என்னுமொரு வரலாற்றை இங்கெழுதி வைத்தஇடம்
பகுத்தறிவுத் தந்தையெனப் பாராட்டும் பெரியாரை
ஆன்மீகத் திருமடத்தில் அடிவைக்கச் செய்திட்ட
குன்றக் குடியடிகள் கொலுவிருந்த பெரியமடம்
தமிழறிந்தோர் எவர்வரினும் தகுதிபல கொடுத்தமடம்
அமுதமகள் தமிழ்த்தாயை அரசாள வைத்தஇடம்
செந்தமிழ் அறிஞருக்குச் சீரள்ளிக் கொடுத்தமடம்
கல்வித் துறையினிலும் கால்வைத்துச் செழித்தமடம்
சமுதாய முரண்பாட்டைச் சந்திக்கும் நோக்கோடு
தம்வாழ்வை அர்ப்பணித்த தமிழடியார் வாழ்ந்தமடம்
சாதிமதக் கலவரங்கள் வீதிக்கு வரும்போது
அடிகளார் தனைத்தவிர வேறுயார் சென்றார்கள்
அத்தகைய நம்அடிகள் அவர்பின்னே தொண்டாற்றும்
முத்தாகத் தான்வந்து முன்நின்றார் நம்முடைய
பொன்னம் பலஅடிகள் பூத்ததமிழ் ஆர்த்துவரும்
நாவன்மை கருத்தோட்டம் நயமிகுந்த சொல்லாட்சி
புதிய கருத்துக்கள் பொலிவான சிந்தனைகள்
தடம்மாறா வழிச்சென்று தன்னுடைய முத்திரையால்
மடம்மாற வேண்டுமென மடம்நடத்தும் தமிழ்ஞானி

நவகண்டி உருத்திராட்சம் நலமான ஆறுகட்டி
சுந்தர வேடமெனச் சொல்கின்ற அலங்காரம்
இல்லாத சாமி எளிய தமிழ்ச்சாமி
நான்குபேர் வழிவிலக்க இரண்டுபேர் பின்தொடர
ஆலவட்டம் குடைஎன்று ஆரவாரம் இல்லாமல்
தீக்கொழுந்து போலத் திகழும்ஒரு காவியுடை
தமிழெழுந்து நடந்துவரும் தன்மானம் மிக்கநடை
பொலியவரும் அடிகளாம் பொன்னம் பலத்தாரைக்
குறட்பீட விருதுபெற்ற கோமகனை எம்முயிரை
சண்முகரைச் சுமப்பதுடன் சமுதாயச் சுமைகளையும்
சேர்த்துச் சுமக்கின்ற சிந்தை படைத்தவரை
உள்ளத்தில் சுமந்தே ஒருகோடி கவிபடைக்கப்
பொன்னம் பலத்தாரைப் போற்றி வணங்குகிறேன்.

---

"நம் உயிர் எங்கே இருக்கின்றது" என்ற ஓர் ஆராய்ச்சி. மருத்துவர்கள் கூடி ஆய்வு செய்கின்றார்கள். ஒரு மருத்துவர், "நம் உயிர் இதயத் துடிப்பில் இருக்கிறது. இதயத் துடிப்பு நின்று போனால் உயிர் பிரிந்து போகும்" என்றார். இன்னொரு மருத்துவர், "நம் உயிர் சுவாசக் காற்றில் இருக்கிறது. சுவாசிக்க மறந்து போனால் உயிர் பறந்து போகும்" என்கின்றார். மற்றும் ஒரு மருத்துவர், "நம் உயிர் இரத்த ஓட்டத்தில் இருக்கின்றது. இரத்த ஓட்டம் தடைப்பட்டால் உயிர் விடைபெறும்" என்கின்றார். ஆளுக்கு ஆள் உயிர் இருக்கின்ற இடம் பற்றிக் கருத்து வேறுபாடுகள். உலகின் தலைசிறந்த உளவியல் மருத்துவர் வான்புகழ் வள்ளுவர் சொல்கின்றார். "நம் உயிர் அன்பினில் இருக்கின்றது. அன்பின் வழியது உயிர்நிலை" என்று அறிவிக்கின்றார். அந்த அன்புதான் அவனி எங்கும் ஆட்கொள்ளப்பட வேண்டும்.

– பொன்னம்பல அடிகளார்

# உலகத் திருக்குறள் பேரவை
# மாநில அளவிலான கல்லூரி மாணவர்களுக்கிடையே நடத்திய கட்டுரைப் போட்டிப் பரிசளிப்பு விழா

## மாநிலச் செயற்குழுக் கூட்டம்

உலகத் திருக்குறள் பேரவை மாநில அளவிலான கல்லூரி மாணவர்களுக்கிடையே நடத்திய கட்டுரைப் போட்டிப் பரிசளிப்பு விழா 4.2.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் குன்றக்குடி ஆதீனத் திருமடத்தில் தலைவர் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாநிலச் செயற்குழுத் துணைத்தலைவர் திரு. சு. முருகானந்தம், புரவலர் திரு.பழ.தருமஆறுமுகம், திரு. கார்த்திகேயன் மணிமொழியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். திருமதி. சந்திரா ரவீந்திரன் அறிக்கை வாசித்தார். திரு. சொ. சேதுபதி வரவேற்புரையும் தொகுப்புரையும் ஆற்றினார். பரிசுகளை போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குத் தலைவர் அவர்கள் வழங்கிப் பாராட்டுரை நிகழ்த்தினார்.

பிற்பகல் 3 மணியளவில் மாநிலச் செயற்குழுக் கூட்டம் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகள் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. செயற்குழு உறுப்பினர்கள் ஐம்பத்தொருவர் கலந்துகொண்டனர். மணற்பாறை திரு. நாவை. சிவம் கடவுள் வாழ்த்துப் பாடினார். இளைஞரணிச் செயலாளர் திரு. சொ. சேதுபதி வரவேற்புரையும் தொகுப்புரையும் ஆற்றினார். தலைவர் நிறைவுரைக்குப பின் தீர்மானங்கள் நிறைவேறின. திரு. சொ. சேதுபதி நன்றிகூற நாட்டு வாழ்த்துடன் கூட்டம் இனிதே நிறைவேறியது.

## செயற்குழுத் தீர்மானங்கள் :

**இரங்கல் தீர்மானம் :**

உலகத் திருக்குறள் பேரவைப் பொதுச் செயலாளர் புதுக்கோட்டை திரு. தி.சு.மலையப்பன் அவர்கள் மறைந்துவிட்டார். உலகத் திருக்குறள் பேரவைக்குப் பேரிழப்பாகும்.

அறுபதாண்டு காலம் தமிழே தன் வாழ்வு, திருக்குறளே தன் மூச்சு என்று வாழ்ந்து வந்த அந்தப் பெருமகனார் மறைவு தமிழ்கூறும் நல் உலகத்தை அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கின்றது. முதுமையால் கால்கள் தளர்வுற்ற நிலையிலும் தம் கருத்துக்கள் தளர்வுறாமல் அவர் ஆற்றிய திருக்குறள் பணிகளுக்கு உலகத் திருக்குறள் பேரவை தம் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றது.

அவர் தம் ஆன்மா இறைவன் திருவடி நீழலில் இன்ப அமைதி பெற பிரார்த்திக்கின்றது.

**தீர்மானம் 1 :**

தமிழ்நாட்டில் உள்ள எல்லாப் பள்ளிகளும் திருக்குறளைக் கற்பிக்க, திருக்குறளைப் பாடத்திட்டத்தில் சேர்க்க வழிவகை செய்யுமாறு தமிழக அரசை உலகத் திருக்குறள் பேரவை கேட்டுக்கொள்கின்றது.

**தீர்மானம் 2 :**

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்ற திருக்குறள் நெறிக்கு ஏற்ப, விவசாயம் செழுமை அடைய நீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்கும் பொருட்டு நதிநீர் இணைப்பு அவசியமாகும். தேசிய அளவில் தார்ச்சாலைப் போக்குவரத்து இணைக்கப்பட்டது போல, தேசிய நீர்வழிப்பாதை இணைக்கப்பட வேண்டும். கடலில் வீணாகக் கலக்கும் நீரை விவசாயத்தைச் செழுமைப்படுத்த - பயன்படுத்த வழிவகை காண வேண்டும் என்று மத்திய மாநில அரசுகளை உலகத் திருக்குறள் பேரவை மாநிலச் செயற்குழு கேட்டுக்கொள்கின்றது.

**தீர்மானம் 3 :**

தமிழகத் திருக்கோயில்களில் தமிழ் அர்ச்சனை செய்ய வழிவகை செய்யும்படி தமிழக அரசை உலகத் திருக்குறள்பேரவை மாநிலச் செயற்குழு கேட்டுக்கொள்கின்றது.

**தீர்மானம் 4 :**

"உண்ணற்க கள்ளை" என்றார் திருவள்ளுவர்.

"குடி குடியைக் கெடுக்கும்: குடிப்பழக்கம் உடல்நலத்தைக் கெடுக்கும்" என்பது நூற்றுக்கு நூறு உண்மையாகும்.

மதுப்பழக்கத்தால் இளைஞர்கள் உடல்நலம் குன்றுதலோடு, குடும்ப அமைதி கெட்டு சமுக அமைதி கெட்டு தமிழ்ச் சமுதாயம் அழிவின் விளிம்பில் ஜீவ மரணப் போராட்டத்தை நித்தம் நித்தம் சந்தித்து வருகின்றது. தமிழக மக்களின் நல்வாழ்வினைக் காக்கும் பொருட்டு, பூரண மதுவிலக்கினை அமுல்படுத்துமாறு தமிழக அரசினை உலகத் திருக்குறள் பேரவை கேட்டுக்கொள்கின்றது.

## "குறள்நேயர்"

# மாண்பமை குன்றக்குடியார் வாழியவே!

(உரு. அசோகன், புதுச்சேரி)

அற்றை நாளின் அழகை யெல்லாம்
அள்ளி யுரைத்தீரே!
நேற்றை வாழ்வை நிறையச் சொல்லி
நெஞ்சம் குளிர்வித்தீர்!
காற்றில் கலந்த கவினே தமிழே
காலம் வாழ்த்திடுமே!
ஆற்றும் உரையில் அனைத்தும் குறளே
ஆளும் தமிழாமே!

குன்றக் குடியார் கொட்டும் அருவி
குளிர்ந்த அரங்காமே!
பொன்னும் மணியும் புகழின் ஒளியும்
பொலிந்த தமிழானீர்!
இன்னும் பல்லோர் எழுந்து வந்தார்
எழுச்சி யுரையுள்ளே!
அன்பின் நெறியில் அருளும் உரையில்
அரங்கம் அதிர்ந்ததுவே!

அண்ணல் காந்தி ஆற்றல் பாரதி
அனைத்தும் உரைத்தீரே!
மண்ணில் குறளே மனித நேயம்
மணக்க அருள்கின்றீர்!
விண்ணில் விரிந்த வேகச் சுடராய்
விளைந்த கதிரானீர்!
கண்ணில் கருத்தில் கல்விச் சிந்தை
குறளின் வழிநின்றீர்!

சான்றோர் கதைகள் சாட்சிக் கழைத்து
சிந்தை இனிக்கின்றீர்!
இன்னும் கோடி இனிக்கும் ஆயுள்
இருக்கும் தமிழானீர்!
முன்னோர் வழியை மூல மென்றே
மூட்டும் தீயானீர்!
பொன்னேர் பொழிவில் புகழின் உச்சம்
போற்ற வாழ்வீரே!

---

(இராசபாளையம் திருவள்ளுவர் கழகத்தில் 18.2.2018-இல் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் சொற்பொழிவு கேட்டு மகிழ்ந்து பாடியது)

# நாள்தோறும் கூட்டு ஞானத்தை வளர்த்து பயனடைவோம்!

பல மனிதர்கள் தங்களுடைய முரண்டு தட்டிப்போன தன்மையை மாற்றிக்கொள்ள முன்வராமையினாலேயே முன்னேற்றம் தடைப்படுகிறது. எங்கு எல்லாம், நிர்வாணத் தன்மை வாய்ந்த சுயநலமும், ஆதிக்க மனப்பான்மையும் ஆட்சி செய்கிறதோ, அங்கு தனி மனிதன் மற்றவர்களோடு மோதுதலே செய்வான்.

மனிதன் தனி ஒரு தீவு அல்ல. பல நீர்த் திவலைகளை உள்ளடக்கிய ஏரி அனையவன். மனிதனிடத்தில் ஒப்படைக்கப் பெற்றுள்ள வைப்பாகிய ஆற்றல், அறிவு, கருவிகள் அளப்பில; ஆனால் மனிதன் இவற்றை முழுமையாக நேற்றும் பயன்படுத்தவில்லை! இன்றும் பயன்படுத்தவில்லை! அது மட்டுமா? அவன் இயற்கையாகப் பெற்ற பெரும் வைப்புக் கருவிகளில் - திறன்களில் சிலவற்றை அழித்தும் கெடுத்தும் இருக்கிறான். மனிதன் பல தவறான திருப்பங்களை எடுத்து வாழ்க்கையின் இலக்கிலிருந்து நெடுந்தொலைவு விலகிச் சென்றுவிட்டான்! இயற்கையோடு இசைந்து வாழ்ந்து முன்னேறிச் செல்லாமல் இயற்கையோடு முரண்பட்டுத் துன்பத்தையும் அதிகமாகத் தேடிக்கொண்டு விட்டான்! இந்தத் தவறு நிகழ்ந்ததற்குக் காரணம் மனிதன் கூடிச் சிந்தனை செய்து, முடிவு எடுக்கும் மரபைக் கைவிட்டதுதான்! மனிதனின் கூட்டுச் சமூக வாழ்க்கையில் நாள்தோறும் கூட்டு ஞானத்தைக் கண்டு வளர்த்துக்கொண்டு பயனடைதல் வேண்டும்.

சமுதாய உணர்விலும் சமுதாய ஒழுக்க நலத்திலும் சிறந்து வளர்ந்தால்தான் அன்பு வளரும். அன்பினால் சமுதாயம் உருவாவதில்லை. சமுதாய உணர்வின் செழிப்பில் தான் அன்பு வளர்கிறது. சமுதாய நலஞ்சார்ந்த வாழ்க்கையில் தான் வெறுப்புக்கு மாற்று - மருந்து அன்பு ஒன்று ஆகும். இத்தகு சமுதாய நலங்காணும் வாழ்க்கையில்தான் பொறையுடைமை, மன்னித்தல், துன்பம் செய்யாமை, அகிம்சை ஆகிய பண்புகள் நிலவும்.

- அருள்நெறித்தந்தை

(நூல்வரிசை 13 பக் : 73 - 74)

உ





குன்றக்குடி

## அருள்தரு சண்முகநாதப்பெருமான் திருக்கோயில்

# பங்குனி உத்திரப் பெருந்திருவிழா

(திருவள்ளுவராண்டு 2049 பங்குனி 7 முதல் 16 வரை)

**21.3.2018 முதல் 30.3.2018 வரை**

**முக்கிய நிகழ்ச்சிகள்**

| ஏவிளம்பி | ஆங்கிலத் தேதி / கிழமை | திரு நாள் | வாகனம் சிறப்பு வகை |
|---|---|---|---|
| பங்குனி 7 | 21.3.2018 புதன் | 1 | கொடியேற்றம் |
| பங்குனி 8 | 22.3.2018 வியாழன் | 2 | வெள்ளிக்கேடகம் |
| பங்குனி 9 | 23.3.2018 வெள்ளி | 3 | வெள்ளிக்கேடகம் |
| பங்குனி 10 | 24.3.2018 சனி | 4 | வெள்ளிக்கேடகம் |
| பங்குனி 11 | 25.3.2018 ஞாயிறு | 5 | அருள்மிகு வள்ளிநாயகி திருமணம். பூப்பல்லக்கு |
| பங்குனி 12 | 26.3.2018 திங்கள் | 6 | ருத்ராட்சக் கேடகம் |
| பங்குனி 13 | 27.3.2018 செவ்வாய் | 7 | தங்கரதம் |
| பங்குனி 14 | 28.3.2018 புதன் | 8 | தெப்பம், வெள்ளிரதம் |
| பங்குனி 15 | 29.3.2018 வியாழன் | 9 | திருத்தேர் |
| பங்குனி 16 | 30.3.2018 வெள்ளி | 10 | உத்திரம், தீர்த்தவிழா |

10ஆம் திருநாள் அக்கினிக் காவடி, பறவைக் காவடி முதலியவை பார்க்கத்தக்கவை.

**குன்றக்குடி வருக! குமரன் அருள்பெறுக!**

## சிறப்பாசிரியருக்குக் கடிதங்கள்....

"13.12.17 அன்று மதுரை காமராசர் பல்கலையின் சிறுகதை பற்றி கருத்தரங்கில் தங்களது சிறப்புரை எமது மாணவியரது அறிவுக்கு விருந்தானது.

பல்கலைக் கழகத்தின் கருத்தரங்குகள் வெற்று மாநாடாக வீணாகப் போனமையைக் கண்டும் கல்வியாளர்கள் கையறு நிலையில் இருப்பது, காலத்தின் விபரீதம்தான்!

அன்றைய நிகழ்விற்கு எமது கல்லூரியின், முதுகலை மாணவியர்களை அழைத்துக்கொண்டு வந்திருந்தேன். மதுரை காமராசர் பல்கலையில் பேரா.தமிழண்ணல் அவர்கள் நடத்திய கருத்தரங்குகளை நினைவில் இருத்தி, எனது மாணவியர்களிடம் பலவாறு செய்திகளைப் பகிர்ந்தளித்தேன்.

பல்வேறு தரவுகளைத் தருகின்ற எமது பேராசிரியர், திருமலை அவர்கள் ஒருநிமிடத்தில் முடித்தமை, தமிழ் மாணவிகளுக்குப் பேரிழப்பு!

பல்கலைக்கழக அளவிலான கருத்தரங்கில் "கருப்பாயி" நகைச்சுவை, திரைப்பாடல்கள் என்பன எனக்கு மன வருத்தத்தை அளித்தன. கருத்துக்களைச் செவிமடுக்க வந்த எம்போன்ற பேராசிரியர்களும், மாணவியரும் மிகுந்த ஏமாற்றத்தைப் பெற்றோம். ஆனால், குருவின் பேரருள் அதனை நிறைவு செய்தது.

அன்றைக்கு வெளியிட்ட சிறுகதை நூலின் செழுமையான கதைகளைக் குறிப்பிட்ட தங்களது பேருரையில், எமது மாணவிகள் சிலர், சிறுகதை எழுதுகின்ற உந்துதலைப் பெற்றமை, மனதுக்கு நிறைவு அளித்தது...

அன்றைக்கு மாணவியரோடு வந்தமையால், மாலை நான்கு மணிக்குள் விடுதியில் அவர்களைச் சேர்ப்பிக்கும் கடமையால், குருவினை நேரில் சந்தித்து ஆசிபெற முடியாமல் போனது. பொறுத்தருள்க.

குருவருளால், சோமவார வழிபாடு சிறக்கத் திருவருள் கூட்டுவித்தது. தங்களது ஆணை கிடைக்குமாயில், திருவாதவூர் அரசு பள்ளியில் தொய்ந்துபோன திருவாசக விழாவை நடத்த முற்படுவேன். காத்திருக்கிறேன்.

அன்றைய தினம் (13.12.2017) தமிழ்நாடு அரசின் புதிய பாடநூல் எழுதும் பணிமனையில் பங்காற்ற சென்னை கிளம்பினேன். குருவருளால், அப்பணியில் பங்காற்றி வருகின்றேன்.

அங்கயற்கண்ணம்மை உடனுறை ஆலவாயண்ணல் தாள் பணிந்து, குருவருள் பெற இறைஞ்சுகின்றேன்.

நலமே விளைய விழைவு! நனிநன்றி!

– யாழ். சு. சந்திரா,
15.12.2017

இன்று காலை வானொலியில் மகா சந்நிதானம் வழங்கிய "தலைமை" பற்றிய சான்றோர் சிந்தனை அருளுரை கேட்டு மகிழ்ந்தேன்.

மதுரையில் காந்தியடிகள் மேற்கொண்ட ஆடை மாற்றத்திலிருந்து அவர் வட்டமேசை மாநாடு சென்றதும் தென்னாப்பிரிக்காவில் தில்லையாடி வள்ளியம்மையால் தமிழைக் கற்றுக்கொள்ள ஆசைப்பட்டதுமான அடுக்கடுக்கான கருத்துக்கள் சிந்தனை இதமான கருத்துக்களாக இருந்தன.

அருளுரையின் சாரமாக – பாட்னா ரயில் நிலையத்தில் நிகழ்த்திய அறிவுரைச் செய்தி அற்புதமாக இருந்தது. தலைமைக்குரிய இலக்கண வரையறையாக இருந்தது.

சிறப்பாகத் தமிழ்தான் காந்தியடிகளைப் பாதிப்புக்குள்ளாக்கியது என அருளிய கருத்து பெரிதும் வரவேற்புக்குரியதாகும்.

கேட்டு மகிழ்ந்ததால் குன்றக்குடியின் சூழலில் ஈடுபட்ட உணர்வைப் புதுப்பித்துக்கொண்டேன் எனப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

– தெ. முருகசாமி, புதுச்சேரி
5.12.2017

"தொடர்ந்து சிலவாரச் செவ்வாய்க் கிழமை தோறும் மகாசந்நிதானம் அருளிய சான்றோர்" சிந்தனையைக் கேட்டு மகிழ்ந்தேன்.

சென்றபோது "இன்குலாப் சிந்தாபாத்" – என்ற புரட்சி வாசகக் குரல் மகிமையைப் பகவத் சிங் போன்றோருடன் தொடர்புபடுத்தியவை இன்றும் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன.

இன்றும் "சூழல்" பற்றிய கருத்துரை கேட்டு மகிழ்ந்தேன்.

குன்றக்குடியில் இருந்து கேட்பது போன்ற உணர்வைப் பெற்றேன்.

"கோயிலைச் சார்ந்த குடிகள்
குடிகளைச் சார்ந்த கோயில்"

என்ற வாசகம் குன்றக்குடியிலிருந்து புறப்பாட்டு வாசகமாகப் பரிபூரணமான தவத்திரு அடிகள் கூறுவார்கள்.

அதுபோல் தங்கள் "வாழ்வும் பாலை, வளமும் பாலை" என்ற எச்சரிக்கை வாசகப் பொருள் அருமையாகத் திருமடத்தின் குரலாக இருந்தது.

வைரமுத்துவின் மனிதன் மரந்தான் மறந்தான் என்ற ஒப்புமை கூறியதும் செவிக்கினிமையாக இருந்தது.

கேட்ட மகிழ்ச்சியைத் தெரிவித்து ஆசி நினைய விரும்பி இம்மடலை வரைந்தேன்.

– ஆதீன அன்பன் தெ. முருகசாமி, புதுச்சேரி
26.12.2017

"மக்கள் சிந்தனை" மார்கழி இதழில், "ஏழை பங்காளனைப் போற்றிடுவோம்" என்ற தலையங்கம் நடைமுறைக்கு ஒத்த கருத்தை நயமுடன் வடிவமைத்த அருளிப்பாடு மகிழ்வைத் தந்தது.

"திருவெம்பாவை" ஆன்மீக விடியலுக்கு மணிவாசகரைக் காட்ட எத்தனை நடைமுறை எடுத்துக்காட்டுகள்.

"விண்ணோர்கள் விளிக்கும் முகமன்களை விரும்பாதவன்" : மனித உள்ளங்களில் அமர்ந்து அருள்பாலிக்கவே ஆசை கொள்கின்றான்? என்ற தொடர், திருவெம்பாவையை ஓதி ஓதி அலுத்த, எம்போன்ற ஓதுவார்மூர்த்திகளை எழுச்சி பெறவைக்கும் வைர வார்த்தைப்பாடாகும். அடியாரை அடையாளம் காட்டுவதிலும் புரட்சிதான்.

"இறைத் தன்மையை வாழ்வில் ஏற்று நடப்பவர்கள் தொண்டிற்காகவே வாழ்கின்றவர்கள். தன்னலம் அற்ற தலைமைப் பண்புக்கு உரியவர்கள் என்று பாவைமார் வேண்டும் கணவரை அடையாளங் காட்டுவது முன்னைத் தமிழ்மாமுனிவர் எச்சங்கள் வாழ்வு பெறுவது மகிழ்வு தருவதாகும்.

"ஏழை பங்காளனை" "நாங்கள் எல்லாம்" "மாதொரு பாகன்" என்று பொருளுரைப்பதனை கீழே இறக்கிவைத்து, "பசித்தவயிறுகளுக்கு உணவிட்டு, கருணைக் கரங்களாய், வாழ்வை நகர்த்துவோம்" என்று ஏழை பங்காளனை வறியவரிடம் நகர்த்திய, மனப்பாங்கு வாழ்க)

– தா.குருசாமி, வித்துவான்

சுவாமி கடந்த 4 செவ்வாய்க் கிழமைகளாக வானொலியில் தாங்கள் உரையாற்றியதைக் கேட்டு மகிழ்ந்தேன்.

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் தொண்டாற்றியதை அழகாகக் கூறினீர்கள். தில்லையாடி வள்ளியம்மையோடு காந்தி உரையாடியதைத்

தாங்கள் நாடகம் போல் ஏற்ற இறக்கத்தோடு கூறினீர்கள் சுவாமி. இன்று சுற்றுச்சூழல் அறிவோம் என்பதை அழகாகச் சொன்னீர்கள். வைரமுத்துவின் கவிதை வரிகளை எடுத்துரைத்தீர்கள் எங்கே. எடுத்தீர்களோ கவிஞரின் பாடல்களை! பாராட்டு சுவாமி. இன்றைய சூழல் அப்படி இருக்கிறதே.

கதைபோல "எடுப்பு, தொடுப்பு, முடிப்பு" - இருந்தது. கதை எழுதுங்கள் சுவாமி. ஆன்மீகக் கதைகள் எழுதலாம். நாங்கள் படிக்க நீங்கள் உருவாக்குங்கள் சுவாமி.

– முனைவர். தாயம்மாள் அறவாணன், சென்னை–29

தஞ்சாவூர் உலகத் திருக்குறள் பேரவையின் 44-ஆவது ஆண்டு விழாவின் போது (12.2.2018) அடிகளார் ஆற்றிய உரை மிகவும் சிறப்பானது. நினைவில் நிற்கும் பெரிய அடிகளாரின் நினைவு வந்தது.

எனக்கு வயது 84. நான் சிறு வயது முதலே தமிழின்பாலும், திருக்குறள் மேலும் மிகவும் ஈடுபாடுடையவன். தஞ்சையில் தி. பாலசுப்பிரமணியன் என்கிற தி.பா.வால் நடத்தப்பட்ட தொல்காப்பியர் கழகத்தில் உறுப்பினனாக, செயற்குழு உறுப்பினனாக, தணிக்கையாளனாக பணியாற்றியவன். தி.பா.வால் சிறப்பாக - மிகமிக சிறப்பாக நடத்தப்பட்ட திருவள்ளுவர் ஈராயிரம் விழாவில் பெரிய அடிகளார் திருவள்ளுவர் படம் திறந்தபோது அவர் அருகிலிருந்து படத்திறப்புக்கு உதவியவன். அந்த நிழல்படம் இப்போதும் கண்ணாடி போட்டு மாட்டியுள்ளேன். அதே போன்ற வாய்ப்பு இப்போது இளைய அடிகளாருடனும் படம் எடுத்துக் கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது எனக்குக் கிடைத்த மிக அரிய வாய்ப்பு. நான் தமிழ்ப்புலவரல்ல. தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கியில் மேலாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவன். அண்மையில் நடைபெற்ற உலகத் திருக்குறள் பேரவை செயற்குழுக் கூட்டத்திலும் ஆண்டுதோறும் நடைபெறும் கூட்டத்திலும் குறளறச் சுடர் பழ மாறவர்மனுடன் வந்து கலந்து கொண்டு வருகிறேன்.

திருச்சி திருக்குறள் சண்முகநாரால் நடத்தப்பட்டுப் பின்னர், தற்போது திருக்குறள் சு. முருகானந்தம் தலைமையில் இயங்கிவரும் திருக்குறள் கல்வி மையத்தின் சார்பில் தஞ்சையில் சுமார் 27

ஆண்டுகளாக வாரந்தோறும் பள்ளிப் பிள்ளைகளுக்கு திருக்குறள் வகுப்பு நடத்தி வருகிறோம். அதில் பயின்று 1330 குறளையும் மனனம் செய்த மூன்று பிள்ளைகளும் தான் நேற்று தங்கள் கரத்தால் பாராட்டுப்பத்திரம் பெற்றனர். மேலும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு திருக்குறள் அஞ்சல்வழிமூலம் கற்பித்து நேர்முக வகுப்புகள் நடத்தி சுமார் 700 பேருக்கு "திருக்குறள் இளம் புலமையர்" சான்று வழங்கி வருகிறோம். ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாள் விழாவினை சுறவம் 2-ஆம் நாள் அன்றே நடத்தி வருகிறோம். இந்த விவரங்களை அடிகளாருக்குத் தெரிவிப்பதில் மகிழ்கிறேன்.

12.2.2018 உலகத் திருக்குறள் பேரவை தஞ்சாவூர் 44-ஆவது ஆண்டு விழாவில் அடிகளார் ஆற்றிய உரையில் சிலவற்றை நினைவு கூர்வது பயனுள்ளது. மகிழ்ச்சியானது. தேவையானது.

மருந்தில்லா மருத்துவம், உணவே மருந்து என்பதை விளக்கியது பலருக்கும் பயன்தரும்.

சாத்திரம் பேசும் சழக்கர்காள் - பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் ஒப்புமை மிகச்சிறந்த ஒப்புமை.

அக்பர் - பீர்பால் - பற்றிக் கூறியது. தீதும் நன்றும் பிறர் தர வாரா என்றது. பீர்பால் காவலரை அறைய அதனால் ஒவ்வொருவரும் ஒவ்வொருவரை அறைய அது மன்னரையே அறைய ஏற்பட்ட நிலையை "பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா பிற்பகல் தாமே வரும்" என்ற குறளுக்கான விளக்கமாக அமைந்தது.

வைரக்கல்லைப் பாதுகாக்க ஒருவன் செலவிட்டது. மாவாட்டும் கிழவி என் வயிற்றுப்பாட்டுக்கு இதுவே வழி செய்கிறது என்று கூறியது.

வைரக்கல்லால் பயனில்லை - அது பாதுகாக்கப்பட செலவு செய்ய வேண்டும்.

ஆட்டுக்கல்லைப் பாதுகாக்கத் தேவையில்லை. அது மூதாட்டியின் வயிற்றுப் பசியைப் போக்க உதவி வருகிறது என்பது போன்ற விளக்கம் மிகவும் சிறப்பானது. அப்போது எனக்கு,

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃது ஒருவன்
பெற்றான் பொருள்வைப்புழி"

என்ற குறளை நினைவூட்டியது.

ஜாதகம் பார்க்க இருபெண்களின் ஜாதகத்தைக் கொடுத்துப் பார்க்கச் சொல்ல இரண்டு ஜாதகமுமே பெண்கள் ஜாதகமாக இருக்கிறதே என்று

ஜோசியர் கேட்க அது ஒன்று மாமியார் ஜாதகம், மற்றொன்று மருமகள் ஜாதகம் என்று கூறியது நகைச்சுவையாயிருப்பினும் சிந்திக்க வேண்டிய செய்தி! விவேகாநந்தரை அமரச்செய்து அந்த ஊர்தியை சேதுபதி தானே இழுத்து வந்தது என்பது போன்ற அரிய செய்திகளை அடிகளார் மூலம் அறியும்போது மகிழவைக்கிறது.

பொறாமையுள்ளவன் நண்பனை இழக்கிறான். கோபமுள்ளவன் தன்னையே இழக்கிறான் என்று கூறியது "தன்னைத்தான் காக்கின் சினம் காக்க காவாக்கால் தன்னையே கொல்லும் சினம்" என்ற குறளை நினைவூட்டியது. பொதுவாக அடிகளாரின் உரை சிந்தனைக்கு உரமூட்டியது எனலாம். – ச. சோமசுந்தரம், தஞ்சாவூர்

## சிந்தனை வட்டம்.....

"மக்கள் சிந்தனை" ஆலை – நவம்பர் 2017 மாத இதழில் நமது சிறப்பாசிரியர் ஐயா, குன்றக்குடி குருமகாசந்நிதானம் அவர்கள் "தியாகத்தின் வெளிச்சம்!" என்ற தலைப்பில் காந்திமகான் நேரு அவர்கள் நினைவினை அறியாதவர் கூட அறிய வேண்டுமென அறிவுத் தாக்கத்தோடு குழந்தைகள் தினச் செய்தியினை வழங்கி இருக்கின்றார்கள். மேலும் தினந்தோறும் ஐயா அவர்களின் எழுத்தைப் பார்க்க வேண்டும் என ஆவல் இருப்பினும் "மக்கள் சிந்தனை" மூலம் அறிய 60 நாட்கள் கடந்துவிடுகின்றது. பிரதி மாதம் மக்கள் சிந்தனை நூல் வராதா என ஏங்கி நிற்கும் வாசகர்களில் நானும் ஒருவன், என்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்கின்றேன், "மக்கள் சிந்தனை" மன அழுக்கை வெளியேற்றி மன அமைதியை உருவாக்கும் நூலாக அமைந்துள்ளது நன்றி!"

– ச. சுப்பிரமணியன், கொடுங்கையூர்

நம்பிக்கை, நம்பிக்கை – நம்மிடத்தில் நம்பிக்கை; நம்பிக்கை கடவுளிடத்தில் நம்பிக்கை. இதுவே மகிமை பெறுவதன் ரகசியமாகும். உங்கள் முப்பத்து மூன்று கோடிப் புராண தெய்வங்களிடமும் நம்பிக்கை இருந்து, உங்கள் மீது உங்களுக்கு நம்பிக்கை இல்லாமல் போனால், உங்களால் செயற்கரிய செயல்களைச் செய்ய முடியாது.

– சுவாமி விவேகானந்தர்

# மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

சிறப்பாசிரியர் : **தவத்திரு பொன்னம்பல அடிகளார்**

| விவரம் | அளவு | 1 வெளியீடு | 12 வெளியீடு |
|---|---|---|---|
| பின்அட்டை வெளிப்புறம் | 1 பக்கம் | ரூ. 750 | ரூ. 7500 |
| அட்டை உட்புறம் | 1 பக்கம் | ரூ. 650 | ரூ. 6500 |
| இதழ் உட்புறம் | 1 பக்கம் | ரூ. 500 | ரூ. 5000 |
| இதழ் உட்புறம் | ½ பக்கம் | ரூ. 350 | ரூ. 3500 |

## சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| தனி இதழ் | ரூ. | 8.00 |
| ஆண்டுச்சந்தா | ரூ. | 90.00 |
| ஆயுட் சந்தா | ரூ. | 1000.00 |
| புரவலர் கட்டணம் | ரூ. | 2000.00 |

**சந்தா – விளம்பரம் அனுப்பவேண்டிய முகவரி**

நிர்வாகி

**மக்கள் சிந்தனை**

குன்றக்குடி – 630 206

சிவகங்கை மாவட்டம்

தொலைபேசி எண் : 04577 - 264227

இந்தியன் வங்கி, பிள்ளையார்பட்டி கணக்கு எண் : 554267544 மூலமும்
மணியார்டர், வங்கி வரைவோலை / காசோலை மூலமும்
அனுப்பலாம்.

ஆதீன இணையதள முகவரி : website : www.kkmutt.org

ஆசிரியர் : **மரு. பரமகுரு**

அச்சிட்டு வெளியிடுவோர் : ஸ்ரீ சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி

**BOOK POST**
Book pocket containing printed matter
MAKKAL CHINTHANAI-Dec 17 - Feb 18

Price Rs. 8-00
Date of Publication 26-2-2018






பெறுந...
திரு ... அவர்கள்

C129
திருவருள் திரு சுவாமிகள் அவர்கள்
கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்
மானகிரி அஞ்சல்
காரைக்குடி வழி

அச்சிட்டோர் : ...